கஉ கேனானுக்கு 70 வயதானபோது அவனுக்கு மகலாலேயேல் என்ற
மகன் பிறந்தான். கங மகலாலேயேல் பிறந்த பிறகு கேனான் 840
ஆண்டுகள் வாழ்ந்தான். அப்போது அவனுக்கு ஆண் பிள்ளைகளும்
பெண்பிள்ளைகளும் பிறந்தனர். கச ஆகவே கேனான் 910 ஆண்டுகள்
வாழ்ந்து மரணமடைந்தான்.

கரு மகலாலேயேல் 65 வயதானபோது அவனுக்கு யாரேத் என்ற மகன்
பிறந்தான். கசு யாரேத் பிறந்த பின் மகலாலேயேல் 830 ஆண்டுகள்
வாழ்ந்தான். அக்காலத்தில் அவனுக்கு ஆண்பிள்ளைகளும்
பெண்பிள்ளைகளும் பிறந்தனர். கஎ மகலாலேயேல் 895 ஆண்டுகள்
வாழ்ந்து மரணமடைந்தான்.

கஅ யாரேத்துக்கு 162 வயதானபோது அவனுக்கு ஏனோக் என்ற
மகன் பிறந்தான். ககூ ஏனோக் பிறந்த பின் யாரேத் 800 ஆண்டுகள்
வாழ்ந்தான். அக்காலத்தில் அவனுக்கு ஆண்பிள்ளைகளும் பெண்
பிள்ளைகளும் பிறந்தனர். உ0 யாரேத் மொத்தம் 962 ஆண்டுகள்
வாழ்ந்து மரணமடைந்தான்.

உக ஏனோக்குக்கு 65 வயதானபோது அவனுக்கு மெத்தூசலா
என்ற மகன் பிறந்தான். உஉ மெத்தூசலா பிறந்தபின் ஏனோக்
300 ஆண்டுகள் தேவனோடு வழிநடந்தான். அக்காலத்தில் அவன்
ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் பெற்றெடுத்தான்.
உங அவன் மொத்தம் 365 ஆண்டுகள் வாழ்ந்தான். உச ஒரு நாள்
ஏனோக் தேவனோடு நடந்துகொண்டிருக்கும்போதே அவன் மறைந்து
போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.

உரு மெத்தூசலாவுக்கு 187 வயதானபோது அவனுக்கு லாமேக் என்ற
மகன் பிறந்தான். உசு லாமேக் பிறந்தபின் மெத்தூசலா 782 ஆண்டுகள்
வாழ்ந்தான். அக்காலத்தில் அவனுக்கு ஆண்பிள்ளைகளும்
பெண்பிள்ளைகளும் பிறந்தனர். உஎ மெத்தூசலா 969 ஆண்டுகள்
வாழ்ந்து மரணமடைந்தான்.

உஅ லாமேக்கிற்கு 182 வயதானபோது அவனுக்கு ஒரு மகன்
பிறந்தான். உகூ அவனுக்கு நோவா என்று பெயரிட்டான். அவன், “நாம்
விவசாயிகளாக பாடுபடுகிறோம். ஏனென்றால் தேவன் பூமியைச்
சபித்திருக்கிறார். ஆனால் நோவா, நமக்கு இளைப்பாறுதலை
அளிப்பான்” என்றான்.

ங0 நோவா பிறந்தபின், லாமேக் 595 ஆண்டுகள்
வாழ்ந்தான். அக்காலத்தில் அவன் ஆண் பிள்ளைகளையும்
பெண்பிள்ளைகளையும் பெற்றெடுத்தான். ஙக லாமேக் மொத்தம் 777
ஆண்டுகள் வாழ்ந்து மரண மடைந்தான்.

ஙஉ நோவாவுக்கு 500 வயதானபின் அவனுக்கு சேம், காம், யாப்பேத்
என்னும் ஆண்பிள்ளைகள் பிறந்தனர்.

**சு**

## ஜனங்கள் தீயவர்களாக மாறுதல்

க-ச பூமியில் ஜனங்கள் தொகை பெருக ஆரம்பித்தது.
அவர்களுக்குப் பெண் பிள்ளைகள் ஏராளமாகப் பிறந்தனர். தேவ
குமாரர்கள் மானிடப் பெண்களை அதிக அழகுள்ளவர்கள் எனக்

அ அவ்வாறே, கர்த்தர் ஜனங்களைப் பூமி முழுவதும் சிதறிப்
போகும்படி செய்தார். அதனால் அவர்கள் அந்த நகரத்தைக் கட்டி
முடிக்க முடியாமல் போயிற்று. கூ உலகமெங்கும் பேசிய ஒரே
மொழியைக் கர்த்தர் குழப்பிவிட்டபடியால் அந்த இடத்தை பாபேல்
என்று அழைத்தனர். கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து
பூமியெங்கும் பரவிப் போகச் செய்தார்.

## சேம் குடும்பத்தின் வரலாறு

கo இது சேமின் குடும்பத்தைப்பற்றி கூறுகின்ற பகுதி:
வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு சேமுக்கு
100 வயதானபோது அர்பக்சாத் என்னும் மகன் பிறந்தான். கக அதன்
பிறகு அவன் 500 ஆண்டுகள் வாழ்ந்தான். அவனுக்கு வேறு
மகன்களும் மகள்களும் இருந்தனர்.
கஉ அர்பக்சாத்துக்கு 35 வயதானபோது சாலா என்னும் மகன்
பிறந்தான். கங சாலா பிறந்த பின் அர்பக்சாத் 403 ஆண்டுகள்
வாழ்ந்தான். அப்போது அவனுக்கு வேறு மகன்களும் மகள்களும்
பிறந்தனர்.
கச சாலாவுக்கு 30 வயதானபோது ஏபேர் பிறந்தான். கரு ஏபேர்
பிறந்தபின் சாலா 403 ஆண்டுகள் வாழ்ந்தான். அப்போது அவனுக்கு
வேறு மகன்களும் மகள்களும் பிறந்தனர்.
கசு ஏபேருக்கு 34 வயதானபோது பேலேகைப் பெற்றான். கஎ பேலேக்
பிறந்த பின் ஏபேர் 430 ஆண்டுகள் வாழ்ந்தான். அப்போது அவனுக்கு
வேறு மகன்களும் மகள்களும் பிறந்தனர்.
கஅ பேலேக்குக்கு 30 வயதானபோது அவனது மகன் ரெகூ பிறந்தான்.
ககூ ரெகூ பிறந்த பின் பேலேகு 209 ஆண்டுகள் உயிர்வாழ்ந்தான்.
அப்போது அவனுக்கு வேறு மகன்களும் மகள்களும் பிறந்தனர்.
உo ரெகூவுக்கு 32 வயது ஆனதும் அவனது மகன் செரூகைப்
பெற்றான். உக செரூகு பிறந்தபின் ரெகூ 207 ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்போது அவனுக்கு வேறு மகன்களும் மகள்களும் பிறந்தனர்.
உஉ செரூகுக்கு 30 வயது ஆனதும் நாகோர் பிறந்தான். உங நாகோர்
பிறந்தபின் செரூகு 200 ஆண்டுகள் வாழ்ந்தான். அப்போது அவனுக்கு
வேறு மகன்களும் மகள்களும் பிறந்தனர்.
உச நாகோருக்கு 29 வயது ஆனதும் அவனது மகன் தேராகைப்
பெற்றான். உரு தேராகு பிறந்ததும் நாகோர் 119 ஆண்டுகள்
வாழ்ந்தான். அப்போது அவனுக்கு வேறு மகன்களும் மகள்களும்
பிறந்தனர்.
உசு தேராகுக்கு 70 வயதானபோது அவனது மகன்கள் ஆபிராம்,
நாகோர், ஆரான் பிறந்தார்கள்.

## தேராகு குடும்பத்தின் வரலாறு

உஎ இது தேராகு குடும்பத்தின் வரலாறு ஆகும். தேராகு என்பவன்
ஆபிராம், நாகோர், ஆரான் ஆகியோரின் தந்தையானவன்.
ஆரான் லோத்தின் தந்தையானவன். உஅ ஆரான் தனது பிறந்த
நகரமான பாபிலோனியாவில் உள்ள ஊர் என்ற இடத்தில்மரண
மடைந்தான். அப்போது அவனது தந்தையான தேராகு உயிரோடு
இருந்தான். உகூ ஆபிராமும் நாகோரும் திருமணம் செய்துகொண்டனர்.

கூ அவனைப் பாதுகாப்பாக அழைத்து வருவோம் என்று உறுதி கூறுகிறேன். அவனை நாங்கள் திருப்பி அழைத்து வாராவிட்டால் நீங்கள் என்னை எப்பொழுதும் பழிகூறுங்கள். க௦ நீங்கள் முன்னமே போகவிட்டிருந்தால் இதற்குள் இரண்டுமுறை போய் வந்திருக்கலாம்" என்று சொன்னான்.

கக பிறகு அவர்கள் தந்தை இஸ்ரவேல், "இது உண்மை என்றால் பென்யமீனை உங்களோடு அழைத்துப்போங்கள். ஆனால் ஆளுநருக்குச் சில அன்பளிப்புகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். நம் நாட்டில் சேகரிக்கத்தக்கவற்றைச் சேகரியுங்கள். தேன், பிசின்தைலம், கந்தவர்க்கம், வெள்ளைப்போளம், தொபிந்துகொட்டைகள், வாதுமைக் கொட்டைகள் போன்றவற்றை எடுத்துச் செல்லுங்கள்.
கஉ பணத்தை இரட்டிப்பாய் எடுத்துப்போங்கள். கடந்த முறை நீங்கள் கொடுத்த பணம் தவறி உங்களிடமே வந்துவிட்டது ஆளுநர் தவறு செய்திருக்கலாம். கங பென்யமீனையும் அழைத்துக்கொண்டு
அவரிடம் போங்கள். கச நீங்கள் ஆளுநர் முன்னால் நிற்கும்போது சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களுக்கு உதவுவார். அவர் சிமியோனையும், பென்ய மீனையும் திருப்பி அனுப்பும்படி பிரார்த்தனை செய்கிறேன். இல்லாவிட்டால் நான் மீண்டும் மகனை இழந்த துக்கத்துக்கு ஆளாவேன்" என்றான்.

கரு எனவே, சகோதரர்கள் காணிக்கைப் பொருட்களோடும் இரண்டு மடங்கு பணத் தோடும் எகிப்துக்குப் புறப்பட்டுப் போனார்கள். இப்போது பென்யமீனும் அவர்களோடு போனான்.

### சகோதரர்கள் யோசேப்பின் வீட்டிற்கு அழைக்கப்படுகிறார்கள்

கசு எகிப்தில், அவர்களோடு பென்யமீனை பார்த்த யோசேப்பு வேலைக்காரனிடம், "இவர்களை என் வீட்டிற்கு அழைத்து வாருங்கள். ஒரு மிருகத்தைக் கொன்று சமையுங்கள். இன்று மத்தியானம் அவர்கள் என்னோடு சாப்பிடுவார்கள்" என்றான். கஎ வேலைக்காரன்
யோசேப்பு சொன்னபடி செய்தான். அவர்களை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துப் போனார்கள்.

கஅ அவர்கள் யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது பயந்தனர். "சென்ற முறை பணத்தை பைக்குள்ளே போட்டுவிட்டதால் இப்போது தனது வீட்டிற்கு அழைக்கிறார். அது நமக்கு எதிரான சாட்சியாகப் பயன்படுத்தப்படும். நமது கழுதைகளைப் பறித்துக்கொண்டு நம்மை அடிமைகளாக்கிவிடுவார்கள்" என்று பேசிக்கொண்டார்கள்.

ககூ ஆகவே அவர்கள் அனைவரும் யோசேப்பின் வீட்டின் பொறுப்பாளனாகிய வேலைக்காரனிடம் வந்தனர். உ௦ அவர்கள்
அவனிடம், "ஐயா, இதுதான் உண்மை என்று வாக்குறுதிச் செய்கிறோம். சென்றமுறை தானியம் வாங்க வந்தோம்.
உக-உஉ வீட்டிற்குத் திரும்பும்போது வழியில் பைக்குள் பணம் இருப்பதைப் பார்த்தோம். அதற்குள் எவ்வாறு வந்தது என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆனால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க கொண்டு வந்திருக்கிறோம். இந்த முறை உணவுப் பொருள் வாங்குவதற்கு அதிகப்படியான பணமும் கொண்டு வந்திருக்கிறோம்" என்றனர்.

மரித்துப்போனார்கள். கோரகினால் மரித்தவர்கள் இதில்
கணக்கிடப்படவில்லை. ரு௦ எனவே நோய் நிறுத்தப்பட்டது. பின்
ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் நின்ற மோசேயிடம் திரும்பி
வந்தான்.

# கஎ

## ஆரோன்தான் தலைமை ஆசாரியன் என தேவன் உறுதிப்படுத்துதல்

க கர்த்தர் மோசேயிடம், உ “இஸ்ரவேல் ஜனங்களிடம் பேசு.
அவர்களிடமிருந்து 12 கைத்தடிகளை வாங்கு. 12 கோத்திரங்களின்
தலைவர்களிடமிருந்தும் ஒவ்வொரு கைத்தடியாகப் பெற வேண்டும்.
ஒவ்வொருவரின் பெயரையும் அவரவர் கைத்தடியிலும் எழுது.
ங லேவியின் கைத்தடியில் ஆரோனின் பெயரை எழுது. ஒவ்வொரு
கோத்திரத்திற்கும் ஒரு கைத்தடி வீதம் பன்னிரண்டு இருக்க
வேண்டும். ச அக்கைத்தடிகளை ஆசரிப்புக் கூடாரத்திற்குள்
உடன்படிக்கைப் பெட்டியின் முன்னால் வை. அந்த இடத்தில்தான்
நான் உன்னைச் சந்திப்பேன். அவர்களில் ஒருவனை நான்
உண்மையான ஆசாரியனாக தேர்ந்தெடுப்பேன். ரு நான்
யாரைத் தேர்ந்தெடுப்பேனோ அவனது கைத்தடியில் இலைகள்
துளிர்த்திருக்கும். இதன் மூலம் உனக்கும் எனக்கும் எதிராக
முறையிடுபவர்களை நான் தடுப்பேன்” என்று கூறினார்.

சு இஸ்ரவேல் ஜனங்களிடம் மோசே பேசினான். ஒவ்வொரு 12
கோத்திரங்களின் தலைவரும் தங்கள் கைத்தடியை அவனிடம்
கொடுத்தார்கள். மொத்தம் 12 கைத்தடிகளைப் பெற்றான்.
ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு கைத்தடி என்பதாக இருந்தது.
ஒரு கைத்தடியில் ஆரோனுடைய பெயர் இருந்தது. எ மோசே
அனைத்து கைத்தடிகளையும் கர்த்தருக்கு முன்னால் உடன்படிக்கைக்
கூடாரத்திற்குள் வைத்தான்.

அ மறுநாள் மோசே கூடாரத்திற்குள் நுழைந்தபோது லேவியின்
குடும்பத்திலிருந்து வந்த ஆரோனின் கைத்தடியில் புதிய இலைகள்
துளிர் விட்டிருந்ததை மோசே பார்த்தான். அதில் கிளைகளும்
தோன்றி வாதுமை பழங்களும் காணப்பட்டன. கூ மோசே கர்த்தரின்
சமூகத்திலிருந்து கைத் தடிகளை எடுத்து வந்து, இஸ்ரவேல்
ஜனங்களிடம் அவற்றைக் காட்டினான். அவரவர் தங்கள்
கைத்தடிகளை பார்த்து எடுத்துக்கொண்டனர்.

க௦ பிறகு கர்த்தர் மோசேயிடம், “ஆரோனின் கைத்தடியை மீண்டும்
கூடாரத்திற்குள் எனது உடன்படிக்கைப் பெட்டியின் முன்பாக
வை. எப்போதும் எனக்கு எதிராகத் திருப்புவோருக்கு இது ஒரு
எச்சரிக்கையாக இருக்கும். இது எனக்கு எதிராக அவர்கள்
முறையிடுவதை தடுக்கும். எனவே அவர்களை நான் அழிக்கமாட்டேன்”
என்று கூறினார். கக எனவே மோசே கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடி
செய்து முடித்தான்.

கஉ இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயிடம், “நாங்கள் மரித்துப்போவோம்
என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் தொலைந்தோம். நாங்கள்
அனைவரும் அழிந்து போவோம். கங எவராவது கர்த்தரின் பரிசுத்த
இடத்தின் அருகில் வந்தாலும் மரித்துப் போவார்கள். நாங்கள்

செபுலோன், தாண், நப்தலி ஆகியோரின் கோத்திரங்கள் ஏபால் மலைமீது நின்று சாபத்தை வாசிப்பார்கள்.

கச "லேவியர் உரத்தக் குரலில்:

கரு " 'பொய்த் தெய்வங்களைச் செய்து இரகசியமான இடத்தில் அதனை ஒளித்து வைப்பவன் சபிக்கப்பட்டவன். அந்த பொய்த் தெய்வங்கள் எல்லாம் சித்திரவேலைக்காரர்களால் மரத்தாலும் கல்லாலும் அல்லது உலோகத்தாலும் செய்யப்பட்ட சிலைகள். கர்த்தர் அவற்றை வெறுக்கின்றார்!' என்று அவர்கள் சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

கசா "லேவியர்கள், 'தன் தகப்பனுக்கும் தாய்க்கும் மரியாதை செய்யாமலிருக்கிறவன் சபிக்கப்பட்டவன்' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று பதில் சொல்லவேண்டும்.

கஎ "லேவியர், 'தனது அயலானின் எல்லைக் கல்லை மாற்றிப் போடுகிறவன் சபிக்கப்பட்டவன்' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று பதில் சொல்லவேண்டும்.

கஅ "லேவியர், 'குருடனை வழிதப்பச் செய்பவன் சபிக்கப்பட்டவன்!' என்று சொல்லும்போது,

"பிறகு எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்லவேண்டும்.

ககூ "லேவியர், 'அயல் நாட்டவர், அநாதைகள், விதவைகளின் நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன்!' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

உ0 "லேவியர், 'தனது மாற்றாந்தாயோடு பாலின உறவு வைத்துக்கொள்பவன் சபிக்கப்பட்டவன். ஏனென்றால், அவன் தன் தந்தைக்கு அவமானத்தைக் கொண்டு வருகிறான்!' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

உக "லேவியர், 'யாதொரு மிருகத்தோடும் புணர்ச்சி செய்கிறவன் சபிக்கப்பட்டவன்!' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

உஉ "லேவியர், 'தன் சகோதரியோடும், சகோதரி உறவுள்ளவர்களோடும் பாலின உறவு கொள்பவன் சபிக்கப்பட்டவன்!' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

உங "லேவியர், 'தன் மாமியாரோடு பாலின உறவு கொள்பவன் சபிக்கப்பட்டவன்!' என்று சொல்லும்போது,

"எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்ல வேண்டும்.

உச "லேவியர், 'மற்றொருவனைக் கொல்லுகிறவன், பிடிபடாமல் இருந்தால் கூட, சபிக்கப்பட்டவனாக இருப்பான்' என்று சொல்லும்போது,

"ஜனங்கள் எல்லோரும் 'ஆமென்' என்று சொல்லவேண்டும்.

உரு "லேவியர், 'ஒரு அப்பாவியைக் கொன்று அவனது பொருட்களை அபகரிப்பவன் சபிக்கப்பட்டவன்.' என்று

சுஙு எருசலேமில் வாழ்ந்த எபூசியரை யூதாவின் படையால் துரத்த முடியவில்லை. எனவே இன்றும் எருசலேமில் யூதர்களோடே எபூசியர் வாழ்கின்றனர்.

## கசா

### எப்பிராயீம், மனாசே ஆகியோருக்கான நிலம்

க யோசேப்பின் குடும்பம் பெற்ற தேசம் இதுவே. எரிகோவின் அருகே யோர்தான் நதியில் ஆரம்பித்து, இத்தேசம் எரிகோவின் ஆறுகள் வரைக்கும் உள்ள பகுதி ஆகும். (அது எரிகோவின் கிழக்குப் பாகமாகும்.) எரிகோவிலிருந்து பெத்தேலின் மலை நாடு வரைக்கும் அதின் எல்லை விரிந்திருந்தது.
உ பெத்தேலிலிருந்து (லூஸ்) அதரோத்திலுள்ள அர்கீயினுடைய எல்லைவரைக்கும் நீண்டது.
ங தொடர்ந்து எல்லை மேற்கே யப்லெத்தியரின் எல்லை வரைக்கும் தொடர்ந்து, தாழ்வான பெத்தொரோன் வரைக்கும் அது விரிந்தது. மேலும் கேசேருக்குச் சென்று, மத்தியதரைக் கடல்வரைக்கும் தொடர்ந்தது.
ச மனாசே, எப்பிராயீம் கோத்திர ஜனங்கள் அவர்களுக்குரிய நாட்டைப் பெற்றனர். (மனாசேயும் எப்பிராயீமும் யோசேப்பின் ஜனங்கள்.)
ரு எப்பிராயீம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் இதுவே: மேல் பெத்தொரோனுக்கு அருகேயுள்ள அதரோத் அதார் என்னும் இடத்தில் கிழக்கெல்லை ஆரம்பித்தது.
சா மிக்மேத்தாத்தில் அதன் மேற்கெல்லை தொடங்கியது. எல்லை கிழக்காகத் திரும்பி தானாத் சீலோவிற்குச் சென்று, யநோகாவிற்குக் கிழக்காகத் தொடர்ந்தது.
எ இந்த எல்லை யநோகாவிலிருந்து அதரோத் மற்றும் நகராத்வரைக்கும் சென்றது. எரிகோவைத் தொடும் அந்த எல்லை தொடர்ந்து யோர்தான் நதியில் போய் முடிந்தது.
அ மேற்கு எல்லை தப்புவாவிலிருந்து கானா நதிக்குப்போய், கடலில் முடிந்தது. எப்பிராயீம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் இதுவே. அந்தக் கோத்திரத்தின் ஒவ்வொரு குடும்பமும் அத்தேசத்தின் பாகத்தைப் பெற்றது.
கூ எப்பிராயீமின் எல்லையிலுள்ள ஊர்களில் பலவும் மனாசேயின் எல்லைகளில் இருந்தன. ஆனால் எப்பிராயீம் ஜனங்கள் அவ்வூர்களையும் அவற்றைச் சூழ்ந்த வயல்களையும் பெற்றனர்.
கo காசேர் என்னும் ஊரைவிட்டுக் கானானியரை வெளியேற்ற எப்பிராயீம் ஜனங்களால் முடியவில்லை. இன்றும்கூட கானானியர் எப்பிராயீம் ஜனங்களோடு வசித்து வருகின்றனர். ஆனால் கானானியர் எப்பிராயீமருக்கு அடிமைகளாயினர்.

## கஎ

க பிறகு மனாசேயின் கோத்திரத்தினருக்கு நிலம் வழங்கப்பட்டது. மனாசே யோசேப்பின் முதல் மகன், கிலேயாத்தின் தந்தையாகிய மாகீர் மனாசேயின் முதல் மகன். மாகீர் சிறந்த வீரன், எனவே கீலேயாத், பாசான் ஆகிய பகுதிகள் அவனுக்குத் தரப்பட்டன.
உ மனாசே கோத்திரத்தின் பிற குடும்பங்களுக்கும் தேசம் கொடுக்கப்பட்டது. அவை அபியேசர், ஏலேக், அஸ்ரியேல்,செகேம், எப்பேர், செமீதா ஆகியோரின் குடும்பங்கள் ஆகும். இவர்கள்

# சாமுவேலின் இரண்டாம் புத்தகம்

## சவுல் மரணத்தை தாவீது அறிதல்

க அமலேக்கியரை முறியடித்தபின் தாவீது சிக்லாகிற்குத்
திரும்பிச் சென்றான். சவுல் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இது
நடந்தது. அங்கே தாவீது இரண்டு நாட்கள் தங்கினான். உ பின்பு,
மூன்றாம் நாளில், ஒரு இளம் வீரன் சிக்லாகிற்கு வந்தான். அவன்
சவுலின் முகாமிலிருந்து வந்திருந்தான். அம்மனிதனின் ஆடைகள்
கிழிந்திருந்தன. அவனுடைய தலையில் புழுதி படிந்திருந்தது* அவன்
தாவீதிடம் வந்து நிலத்தில் முகங்குப்புற விழுந்து வணங்கினான்.
ங தாவீது அம்மனிதனைப் பார்த்து, "நீ எங்கிருந்து வருகிறாய்?"
என்று கேட்டான்.

அம்மனிதன் தாவீதிடம், "நான் இஸ்ரவேலரின் முகாமிலிருந்து வருகிறேன்" என்று பதிலுரைத்தான்.

ச தாவீது அம்மனிதனை நோக்கி, "யார் போரில் வெற்றியடைந்தார்
என்பதை தயவு செய்து கூறு" என்றான்.

அம்மனிதன், "நம் வீரர்கள் போரிலிருந்து தப்பி ஓடினார்கள். பலர் யுத்தத்தில் அகப்பட்டு மடிந்தனர். சவுலும் அவனது மகன் யோனத்தானுங்கூட மரித்துவிட்டனர்" என்று பதில் கூறினான்.

ரு தாவீது இளைஞனாகிய அந்த வீரனிடம், "சவுலும் யோனத்தானும்
மரித்ததைப் பற்றி உனக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டான்.
சு அந்த இளம் வீரன், "நான் கில்போவா மலைக்குப் போயிருந்தேன்.
சவுல் தனது ஈட்டியில் சொருகிச் சாய்ந்துக்கொண்டிருப்பதைப்
பார்த்தேன். பெலிஸ்தியரின் தேர்களும் குதிரை வீரர்களும் சவுலுக்கு
அருகில் நெருங்கிக் கொண்டிருந்தனர். எ சவுல் திரும்பி என்னைப்
பார்த்து அழைத்து அ என்னை யாரென்று கேட்டார். நான் ஒரு
அமலேக்கியன் என்பதை அவருக்குக் கூறினேன். கூ அப்போது சவுல்,
'தயவு செய்து என்னைக் கொன்றுவிடு. நான் மிகவும் காயப்பட்டு
மரிக்கும் தருவாயில் உள்ளேன்' என்றார். க0 அவர் அதிகமாகக்
காயப்பட்டிருந்ததால், இனி உயிர் பிழைக்கமாட்டார் என்பதை நான்
மிக நன்கு அறிந்தேன். எனவே நான் அவரைக் கொன்றேன்.
பின்பு அவரது தலையிலிருந்த கிரீடத்தையும் புயங்களில் இருந்த
கடகத்தையும் கழற்றினேன். அவற்றை என் ஆண்டவனாகிய
உங்களிடம் கொண்டுவந்துள்ளேன்" என்றான்.
கக அப்போது தாவீது தன் துக்கமிகுதியால் ஆடைகளை கிழித்தான்.
தாவீதோடிருந்த மனிதர்களும் அவ்வாறே செய்தார்கள். கஉ அவர்கள்
வருத்தமுற்று அழுது மாலை வரைக்கும் ஏதும் உண்ணவில்லை.
சவுலும் அவனது மகன் யோனத்தானும் மரித்துப் போனதால் அவர்கள்
அழுதார்கள். தாவீதும் அவனது மனிதர்களும் கொல்லப்பட்டிருந்த
கர்த்தருடைய ஜனங்களுக்காகவும் இஸ்ரவேலருக்காகவும்

* **க:உ**: ஆடைகள்…புழுதி படிந்திருந்தது அம்மனிதன் பெருஞ்சோகமாய் இருந்தான் என்பதைக் காட்டும்.

என் பகைவர்கள் என்னை தாக்கினார்கள். ஆனால் எனக்கு உதவிச்செய்ய கர்த்தர் இருந்தார்!
உ0 கர்த்தர் என்மேல் பிரியமாயிருக்கிறார்.
எனவே என்னைக் காத்தார்.
பாதுகாப்பான இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்.
உக கர்த்தர் எனக்கான வெகுமதியை எனக்குத் தருவார்.
ஏனெனில் நான் சரியானவற்றையே செய்தேன்.
நான் தவறிழைக்கவில்லை.
எனவே அவர் எனக்கு நல்லதைச் செய்வார்.
உஉ ஏனென்றால் நான் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தேன்!
எனது தேவனுக்கு எதிரான பாவத்தைச் செய்யவில்லை.
உங நான் கர்த்தருடைய தீர்மானங்களை நினைவில் வைத்திருந்தேன்
அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தேன்!
உச நான் பரிசுத்தமானவனாகவும் களங்கமற்றவனாகவும் அவர் முன்னிலையில் இருந்தேன்.
உரு எனவே கர்த்தர் எனக்கு வெகுமதியைத் தருவார்!
ஏனெனில் சரியானதையே நான் செய்தேன்!
நான் தவறு செய்யவில்லை.
எனவே அவர் எனக்கு நலமானதைச் செய்வார்.

உசா ஒருவன் உண்மையிலேயே உம்மை விரும்பினால் அவனுக்கு உண்மையான அன்பை நீர் காட்டுவீர்.
ஒருவன் உம்மிடம் உண்மையாக இருந்தால் நீர் அவனிடம் உண்மையாக இருப்பீர்.
உஎ கர்த்தாவே, யார் நல்லவராகவும் பரிசுத்தமானவராகவும் இருக்கிறார்களோ, அவர்களுக்கு நீர் நல்லவராகவும், பரிசுத்தமானவராகவும் இருக்கிறீர்.
உம்மிடம் மாறுபாடு உள்ளவர்களுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் நடந்துகொள்வீர்.
உஅ கர்த்தாவே, சிறுமைப்பட்ட ஜனங்களுக்கு உதவுகிறீர்.
மேட்டிமையானவர்களை நாணமுற வைக்கிறீர்.
உகூ கர்த்தாவே, நீர் என்னுடைய விளக்கு.
கர்த்தர் என்னைச் சுற்றியுள்ள இருளைப் போக்கி ஒளி தருகிறார்!
ங0 கர்த்தாவே, உம்முடைய உதவியால் நான் வீரர்களுடன் பாயமுடியும்.
தேவனுடைய உதவியால் பகைவர்களின் சுவர்களில் என்னால் ஏறமுடியும்.

ஙக தேவனுடைய ஆற்றல் முழுமையானது.
கர்த்தருடைய சொல் சோதித்துப்பார்க்கப்பட்டது.
அவரை நம்புகிறவர்களை அவர் பாதுகாக்கிறார்.
ஙஉ கர்த்தரைத் தவிர வேறு தேவன் கிடையாது.
நமது தேவனைத் தவிர வேறு கன்மலை இல்லை.
ஙங தேவன் என் அரண்.
அவர் தூயவர்களைச் சரியாக வாழவைக்கிறார்.
ஙச தேவன் நான் ஒரு மானைப்போல வேகமாக ஓடும்படி செய்கிறார்!
உயரமான இடங்களில் நான் நிலையாக நிற்கும்படி செய்கிறார்.

ருரு தேவன் என்னைப் போருக்குப் பயிற்சி தருகிறார்.
அதனால் என் கைகள் சக்தி வாய்ந்த அம்புகளைச் செலுத்த முடியும்.

ருசு தேவனே, நீர் என்னைப் பாதுகாத்தீர்.
எனக்கு வெற்றி அளித்தீர்.
என் பகைவரை நான் வெல்ல உதவினீர்.
ருஎ என் கால்களையும் மூட்டுகளையும் பலப்படுத்தினீர்.
எனவே நான் தடுமாறாமல் வேகமாக நடக்க முடியும்.
ருஅ நான் பகைவர்களை விரட்ட வேண்டும்.
அவர்களை இறுதியில் அழிக்கும்வரை!
அவர்களை முற்றிலும் அழிக்கும்வரை நான் திரும்பி வரமாட்டேன்.
ருகூ என் பகைவர்களைத் தோற்கடித்தேன்.
அவர்களை வென்றேன்!
அவர்கள் மீண்டும் எழமாட்டார்கள்.
ஆம், என் பகைவர்கள் என் பாதத்தில் விழுந்தார்கள்.

சo தேவனே நீர் என்னை போரில் வலிமையுடையவன் ஆக்கினீர்.
என் பகைவர்கள் என் முன்னே வந்து விழும்படி செய்தீர்.
சக என் பகைவர்களைத் தலைக்குனிய வைப்பதில் நீர் உதவினீர்,
என் பகைவர்களின் கழுத்தை வெட்டும்படியாக அவர்கள் கழுத்தை என் முன் ஒப்புவித்தீர்!
சஉ என் பகைவர்கள் உதவிக்கு ஆள் தேடினார்கள்.
ஆனால் யாரும் அவர்கள் உதவிக்கு வரவில்லை.
அவர்கள் கர்த்தரிடம் கூட கேட்டார்கள்.
ஆனால் அவர் அவர்களுக்குப் பதில் அளிக்கவில்லை.
சரு என் பகைவர்களைத் துண்டு துண்டாக்கினேன்.
அவர்கள் நிலத்தின் மீது புழுதியானார்கள்.
என் பகைவர்களை நான் சிதறடித்தேன்.
அவர்கள் மீது தெருப்புழுதியென நினைத்து நடந்தேன்.

சச நீர் எனக்கு எதிராக போரிட்டவரிடமிருந்து என்னைக் காத்தீர்.
நீர் அந்தத் தேசங்களை ஆள்பவனாக என்னை ஆக்கினீர்.
எனக்குத் தெரியாதவர்கள் இப்போது எனக்குப் பணி செய்கிறார்கள்!
சரு பிற தேசத்தவர் எனக்கு கீழ்ப்படிகின்றார்கள்!
என்னுடைய கட்டளையைக் கேட்கும்போது விரைந்து பணிவிடை செய்கிறார்கள், அயல் நாட்டவர்கள் எனக்குப் பயப்படுகிறார்கள்!
சசு அந்த அயல்நாட்டினர் பயத்தால் நடுங்குகிறார்கள்.
பயந்துகொண்டே அவர்களின் மறைவிடங்களிலிருந்து வெளியில் வருகிறார்கள்.

சஎ கர்த்தர் உயிரோடிருக்கிறார்.
எனது கன்மலையான அவரைத் துதிப்பேன்!
தேவன் உயர்ந்தவர்!
என்னைப் பாதுகாக்கும் ஒரு கன்மலை அவர்.

எல்லா தீர்க்கதரிசிகளையும் கொன்றாள். எனவே ஒபதியா
100 தீர்க்கதரிசிகளை 2 குகைகளில் ஒளித்து வைத்தான்.
ஒவ்வொன்றிலும் 50 பேரை வைத்தான். அவர்களுக்கு உணவும்,
தண்ணீரும் அளித்தான்.) ரு அரசன் ஒபதியாவிடம், "இந்த நாட்டின்
வழியாக என்னைப் போகவிடு. நாம் இங்குள்ள ஒவ்வொரு
ஊற்றையும் ஆற்றையும் பார்ப்போம். நமது குதிரைகளுக்கும்
கழுதைகளுக்கும் புல் கிடைக்குமா என்று பார்ப்போம். கிடைத்தால்
இந்த மிருகங்களைக் கொல்ல வேண்டாம்" என்றான். சு நாட்டைப்
பிரித்துக் கொண்டு ஒவ்வொருவரும் ஒரு பகுதிக்குத் தேடிப்
போனார்கள். இருவரும் நாடு முழுக்கப் போனார்கள். ஆகாப்
ஒரு திசையிலும் ஒபதியா இன்னொரு திசையிலும் போனார்கள்.
எ ஒபதியா, எலியாவை சந்தித்தான். எலியாவைப் பணிந்து
வணங்கினான். அவன், "எலியா? எஜமானரே! உண்மையில் நீங்கள்
தானா?" என்று கேட்டான்.

அ அதற்கு எலியா, "ஆமாம்! நான்தான். நான் இங்கே இருப்பதாக
உன் அரசனிடம் கூறு" என்றான்.

கூ பிறகு ஒபதியா, "நீர் இங்கே இருப்பதைப் பற்றி நான் அரசனிடம்
சொன்னால், அவர் என்னை கொல்வார்! நான் உங்களுக்கு எந்தத்
தவறும் செய்யவில்லையே! ஏன் என்னை கொல்ல விரும்புகிறீர்கள்?
க0 தேவனாகிய கர்த்தர் மீது ஆணையாகக் கூறுகிறேன். அரசன்
உங்களை எல்லா இடங்களிலும் தேடினான்! எல்லா நாடுகளுக்கும்
ஆட்களை அனுப்பினான். ஒவ்வொரு நாட்டு அரசனிடம் நீர் அங்கே
இல்லையென்று சத்தியம் செய்யும்படி செய்தான்! கக நான் அரசனிடம்
போய், நீங்கள் இங்கிருப்பதைச் சொன்னால் கஉ பிறகு, கர்த்தருடைய
ஆவி உங்களை இங்கிருந்து வேறு இடத்துக்குத் தூக்கிச் செல்லும்.
பிறகு, அரசன் உங்களைக் காணாமல் என்னைக் கொல்வான்!
நான் சிறுவயது முதலே கர்த்தரைப் பின்பற்றி வருகிறேன்.
கந நான் செய்ததை நீங்கள் அறிவீர்! யேசபேல் கர்த்தருடைய
தீர்க்கதரிசிகளைக் கொன்றபோது நான் 100 தீர்க்கதரிசிகளை
அழைத்துப் போய் 50 பேர் வீதம் இரண்டு குகைகளில் ஒளித்து
வைத்தேன். உணவு கொடுத்து காப்பாற்றினேன். கச இப்போது நீர்
இங்கிருப்பதாக அரசனிடம் சொல்ல சொல்கிறீர். அவன் என்னைக்
கொன்றுவிடுவான்!" என்றான்.

கரு எலியாவோ, "சர்வவல்லமையுள்ள கர்த்தர் உறுதியாக
வாழ்வதுபோல, நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். இன்று நான்
அரசன் முன்பு நிற்பேன்" என்றான்.

கசு எனவே ஒபதியா அரசனிடம் போய் எலியா இருக்கும் இடம்பற்றி
கூறினான். அரசனும் எலியாவைப் பார்க்க வந்தான்.

கஎ அரசன் எலியாவைப் பார்த்ததும், "இது நீர்தானா? நீர்தான்
இஸ்ரவேலில் எல்லா கஷ்டங்களுக்கும் காரணமானவரா?" என்று
கேட்டான்.

கஅ அதற்கு எலியா, "இஸ்ரவேலின் துன்பத்திற்கு நான் காரணம்
அல்ல. நீயும் உன் தந்தையின் குடும்பமும்தான் காரணம், நீங்கள்
கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. பொய்தெய்வங்களை
பின்பற்றினீர்கள். கசு இப்போது, அனைத்து இஸ்ரவேலர்களும்

சச பேலா மரித்ததும் போஸ்ராவைச் சேர்ந்த சேராகின் மகன் யோபாப் இவனுக்குப் பதில் அரசன் ஆனான்.
சரு யோபாப் மரித்ததும், தேமானியரின் நாட்டானாகிய ஊசாம் புதிய அரசன் ஆனான்.
சசு ஊசாம் மரித்த பின், பேதாதின் மகன் ஆதாத் அவனுக்குப் பதில் அரசன் ஆனான். இவன் மீதீயானியரை மோவாபின் நாட்டிலே தோற்கடித்தான். இவனது நகரத்தின் பெயர் ஆவீத் ஆகும்.
சஎ ஆதாத் மரித்த பின், மஸ்ரேக்கா ஊரைச் சேர்ந்த சம்லா அவனுக்குப் பதில் அரசன் ஆனான்.
சஅ சம்லா மரித்த பின் சவுல் புதிய அரசன் ஆனான். இவன் ஐபிராத்து ஆற்றின் கரையில் உள்ள ரேகோபோத்தைச் சேர்ந்தவன்.
சகூ சவுல் மரித்த பின், அக்போரின் மகனான பாகாலானான் அவனுக்குப் பதில் அரசன் ஆனான்.
ருo பாகாலானான் மரித்தபின், ஆதாத் அவனுக்குப் பின்
புதிய அரசன் ஆனான். இவனது நகரத்திற்கு பாகி என்று
பெயரிடப்பட்டது. ஆதாத்தின் மனைவியின் பெயர் மெகேதபேல்
ஆகும். மாத்திரேத்தின் மகள் மெகேதபேல் ஆவாள். மேசகாபின்
மகள் மாத்திரேத் ஆவாள். பிறகு, ஆதாத் மரித்தான்.
ருக ஆதாத்
மரித்தபின், ஏதோமில் திம்னா, அல்யா, எதேத்.
ருஉ அகோலிபாமா,
ஏலா, பினோன்,
ருங கேனாஸ், தேமான், மிப்சார்,
ருச மக்தியேல்,
ஈராம் ஆகியோர் ஏதோமின் தலைவர்கள் ஆனார்கள்.

# உ

## இஸ்ரவேலின் மகன்கள்

க ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன்,
உ தாண்,
யோசேப்பு, பென்யமீன், நப்தலி, காத், ஆசேர் ஆகியோர்
இஸ்ரவேலின் மகன்களாவார்கள்.

## யூதாவின் மகன்கள்

ங ஏர், ஓனான், சேலா ஆகியோர் யூதாவின் மகன்கள். இந்த
மூன்றுபேரும் பத்சூவா பெற்ற பிள்ளைகள். இவள் கானான்
நாட்டுப் பெண். யூதாவின் முதல் மகனான ஏர், கெட்டவனாக
இருப்பதைக் கர்த்தர் கண்டார். அதனால் கர்த்தர் அவனை
கொன்றுவிட்டார்.
ச யூதாவின் மருமகளான தாமார் அவனுக்குப்
பாரேஸ், சேரா எனும் இருவரைப் பெற்றாள். ஆக யூதாவுக்கு 5
மகன்கள் இருந்தார்கள்.
ரு எஸ்ரோனும் ஆமூலும், பாரேசின் மகன்களாவார்கள்.
சு சேராவுக்கு
5 மகன்கள். சிம்ரி, ஏத்தான், ஏமான், கல்கோல், தாரா ஆகியோர்
ஆவார்கள்.
எ சிம்ரியின் மகன் கர்மீ. கர்மீயின் மகன் ஆகார். ஆகார் இஸ்ரவேலுக்குப் பல தொல்லைகளை வரவழைத்தவன். இவன் போரில் சில பொருட்களை எடுத்துக் கொண்டான். அவற்றை அவன் தேவனுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை.
அ அசரியா ஏத்தானின் மகன்.
கூ யெர்மெயேல், ராம், கெலுபா ஆகியோர் எஸ்ரோனின் பிள்ளைகள்.

க கெர்சோன், கோகாத், மெராரி ஆகியோர்
லேவியின் மகன்கள்.
உ அம்ராம், இத்சார், எப்ரோன், ஊசியேல் ஆகியோர் கோகாத்தின்
மகன்கள்,
ங அம்ராம், மோசே, மிரியாம் ஆகியோர் அம்ராமின் மகன்கள்.
நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் ஆகியோர் அம்ராமின்
பிள்ளைகள் ச எலெயாசார் பினெகாசின் தந்தை, பினெகாஸ்
அபிசுவாவின் தந்தை. ரு அபிசுவா புக்கியின் தந்தை, புக்கி
ஊசியின் தந்தை. சு ஊசி செராகியாவின் தந்தை, செராகியா
மெராயோதின் தந்தை. எ மெராயோத் அமரியாவின் தந்தை,
அமரியா அகிதூபின் தந்தை. அ அகிதூப் சாதோக்கின் தந்தை,
சாதோக் அகிமாசின் தந்தை. கூ அகிமாஸ் அசரியாவின் தந்தை,
அசரியா யோகானானின் தந்தை. க௦ யோகானான் அசரியாவின்
தந்தை. (இவன்தான் சாலொமோன் எருசலேமில் ஆலயத்தைக்
கட்டியபோது ஆசாரிய பணியைச் செய்தவன்.) கக அசரியா
அமரியாவின் தந்தை, அமரியா அகிதூபின் தந்தை. கஉ அகிதூப்
சாதோக்கின் தந்தை, சாதோக் சல்லூமின் தந்தை. கங சல்லூம்
இல்க்கியாவின் தந்தை, இல்க்கியா அசரியாவின் தந்தை.
கச அசரியா செராயாவின் தந்தை, செராயா யோசதாக்கின் தந்தை.
கரு யூதர்களையும், எருசலேம் ஜனங்களையும் கர்த்தர்
வெளியேற்றியபோது யோச தாக்கினையும் கட்டாயமாக
வெளியேற்றினார். இவர்கள் இன்னொரு நாட்டில்
அடிமைகளானார்கள். நேபுகாத் நேசரைப் பயன்படுத்தி கர்த்தர்
இவர்களைச் சிறை பிடித்தார்.

## லேவியின் மற்ற சந்ததியினர்

கசு கெர்சோம், கோகாத், மெராரி ஆகியோர் லேவியின் மகன்கள்.
கஎ லிப்னி, சிமேயி ஆகியோர் கெர்சோமின் மகன்கள்.
கஅ கோகாத்தின் மகன்கள் அம்ராம், இத்சார், எப்ரோன், ஊசியேல்
ஆகியோர்.
ககூ மெராரியின் மகன்கள் மகேலி, மூசி ஆகியோர். இதுதான்
லேவியின் கோத்திரத்தில் உள்ள குடும்பங்களின் விபரமாகும்.
அவர்கள் தம் தந்தை பெயர்களோடு சேர்க்கப்பட்டனர்.
உ௦ இது கெர்சோமின் சந்ததியினரின் விபரம்: கெர்சோமின் மகன்
லிப்னி, லிப்னியின் மகன் யாகாத், யாகாத்தின் மகன் சிம்மா.
உக சிம்மாவின் மகன் யோவா, யோவாவின் மகன் இத்தோ,
இத்தோவின் மகன் சேரா, சேராவின் மகன் யாத்திராயி.
உஉ இது கோகாத்தின் சந்ததியினரின் விபரம்: கோகாத்தின் மகன்
அம்மினதாப், அம்மினதாபின் மகன் கோராகு, கோராகுவின் மகன்
ஆசீர். உங ஆசீரின் மகன் எல்க்கானா, எல்க்கானாவின் மகன்
அபியாசாப், அபியாசாப்பின் மகன் ஆசிர். உச ஆசிரின் மகன்
தாகாத், தாகாத்தின் மகன் ஊரியேல், ஊரியேலின் மகன் ஊசியா,
ஊசியாவின் மகன் சவுல்.
உரு அமாசாயியும், ஆகிமோத்தும் எல்க்கானாவின் மகன்கள்.
உசு எல்க்கானாவின் இன்னொரு மகன் சோபாய், சோபாயின்
மகன் நாகாத். உஎ நாகாத்தின் மகன் எலியாப், எலியாப்பின் மகன்

வீரர்கள், திறமைமிக்க வீரர்களான இவர்களில் 26,000 பேர் போர் செய்வதற்குத் தயாரான வீரர்களாக இருந்தார்கள்.

# அ

## சவுல் அரசனின் குடும்ப வரலாறு

க பென்யமீன் பேலாவின் தந்தை. பேலா
பென்யமீனின் மூத்த மகன், அஸ்பால் பென்யமீனின் இரண்டாவது
மகன். அகராக் பென்யமீனின் மூன்றாவது மகன். உ நோகா,
பென்யமீனின் நான்காவது மகன். ரப்பா, பென்யமீனின்
ஐந்தாவது மகன்.
ஙு-ரு ஆதார், கேரா, அபியூத், அபிசுவா, நாமான், அகோவா, கேரா,
செப்புப்பான், ஊராம் ஆகியோர் பேலாவின் மகன்கள்.
சு-எ இவர்கள் ஏகூதின் சந்ததியினர். கேபாவின் குடும்பங்களுக்குத்
தலைவர்களாக இருந்தனர். இவர்கள், தம் வீடுகளை விட்டு
விட்டு மனாகாத்துக்குப் போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.
நாமான், அகியா, கேரா ஆகியோர் ஏகூதின் சந்ததியினர். கேரா
இவர்களைக் கட்டாயமாக வீட்டைவிட்டு அழைத்துச்சென்றான்.
ஊசா, அகியூத் ஆகியோர் தந்தையானான் கேரா.
அ மோவாப்பில் சகாராயீம் தன் மனைவிகளான ஊசிம், பாராள்
ஆகியோரை விவாகரத்து செய்தான். பின்னர் பிற மனைவியோடு
சில பிள்ளைகளைப் பெற்றான். கூ-கO சகாராயீம் தன்
மனைவியான ஓதேசாலிடம் யோவாப், சீபியா, மேசா, மல்காம்,
எயூஸ், சாகியா, மிர்மா, ஆகிய பிள்ளைகளைப் பெற்றான்.
இவர்கள் சகாராயீமின் மகன்கள். கக சகாராயிமுக்கும் ஊசீமுக்கும்
இரண்டு மகன்கள். அவர்களின் பெயர் அபிதூப், எல்பால்.
கஉ-கங எல்பாலின் மகன்களாக ஏபேர், மீஷாம், சாமேத், பெரீயா,
சேமா ஆகியோர் பிறந்தனர். சாமேத் ஓனா, லோத் ஆகிய
நகரங்களையும், லோத்தைச் சுற்றிலும் சிறிய ஊர்களையும்
உருவாக்கினான். பெரீயாவும், சேமாவும் ஆயயோன் ஜனங்களின்
தலைவர்களாயிருந்தனர். இவர்கள் காத்தியர்களைக்
கட்டாயப்படுத்தி வெளியேற்றினர்.
கச பெரீயாவின் மகன்களாக சாஷாக், ஏரேமோத் கரு செபதியா,
ஆராத், ஆதேர், கசு மிகாயேல், இஸ்பா, யோகா ஆகியோர்
பிறந்தனர். கஎ எல்பாலின் மகன்களாக செபதியா, மெசுல்லாம்,
இஸ்கி, ரபேர், கஅ இஸ்மெராயி, இஸ்லியா, யோபாப் ஆகியோர்
பிறந்தனர்.
ககூ சிமேயின் மகன்களாக யாக்கீம், சிக்ரி, சப்தி, உO எலியேனாய்,
சில்தாய், எலியேல், உக அதாயா, பெராயா, சிம்ராத், ஆகியோர்
பிறந்தனர்.
உஉ சாஷாக்கின் மகன்களாக இஸ்பான், ஏபேர், ஏலியேல்,
உங அப்தோன், சிக்ரி, ஆனான், உச அனனியா, ஏலாம், அந்தோதியா,
உரு இபிதியா, பெனூயேல் ஆகியோர் பிறந்தனர்.
உசு எரொகோமின் மகன்களாகச் சம்சேராய், செகரியா, அத்தாலியா,
உஎ யரெஷியா, எலியா, சிக்ரி என்பவர்கள் பிறந்தனர்.

சாலொமோனது இடத்தில் அவனது மகனான ரெகொபெயாம் அரசன் ஆனான்.

# கஉ

## ரெகொபெயாம் முட்டாள்த்தனமாக நடந்துக்கொள்கிறான்

க இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும்
ரெகொபெயாமை அரசனாக்க விரும்பியதால் அவன் சீகேம்
நகரத்திற்குப் போனான். உ யெரொபெயாம், சாலொமோனுக்கு அஞ்சி
ஓடி எகிப்தில் இருந்தான். அவன் நேபாத்தின் மகன். ரெகொபெயாம்
புதிய அரசனாகப் போகிற செய்தியை யெரொபெயாம்
கேள்விப்பட்டான். எனவே யெரொபெயாம் எகிப்திலிருந்து
திரும்பி வந்தான். ங இஸ்ரவேல் ஜனங்கள் யெரொபெயாமைத்
தங்களோடு வரும்படி அழைத்தனர். பிறகு யெரொபெயாமும்
இஸ்ரவேல் ஜனங்களும் ரெகொபெயாமிடம் சென்றனர். அவர்கள்
அவனிடம், ரெகொபெயாம், ச "உனது தந்தை எங்கள் வாழ்க்கையைக்
கடினமாக்கிவிட்டார். இது பெரிய பாரத்தைச் சுமப்பதுபோல்
உள்ளது. இப்பாரத்தை எளிதாக்கும். பிறகு நாங்கள் உமக்கு
சேவைச்செய்வோம்" என்றனர்.

ரு ரெகொபெயாம் அவர்களிடம், "மூன்று நாட்களுக்குப் பிறகு
என்னிடம் திரும்பி வாருங்கள்" என்றான். எனவே எல்லோரும்
புறப்பட்டுச் சென்றார்கள்.

சா பிறகு அரசன் ரெகொபெயாம் தன் தந்தையான சாலொமோனுடன்
கூடவே இருந்த மூத்த பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்தான்.
அவர்களிடம் அவன், "இந்த ஜனங்களுக்கு நான் என்ன பதில்
சொல்லவேண்டும்?" என்று கேட்டான்.

எ அம்முதியவர்கள் அவனிடம், "நீங்கள் அந்த ஜனங்களோடு
கருணையோடு இருந்தால் அவர்கள் மனம் மகிழும்படி செய்யுங்கள்.
நல்ல முறையில் பேசுங்கள் பின் அவர்கள் உங்களுக்கு என்றென்றும்
சேவை செய்வார்கள்" என்றனர்.

அ ஆனால் ரெகொபெயாம் முதியவர்கள் சொன்ன
ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் தன்னோடு
வளர்ந்து தனக்கு சேவை செய்துவரும் இளைஞர்களிடம் ஆலோசனை
கேட்டான். கூ அவர்களிடம் அவன், "நீங்கள் என்ன ஆலோசனை
கூறுகிறீர்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும்?
நான் அவர்களின் வேலை பாரத்தைக் குறைக்கவேண்டும் எனக்
கேட்கிறார்கள். என் தந்தை அவர்கள்மேல் சுமத்திய பாரத்தைக்
குறைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்" என்று கேட்டான்.

கO ரெகொபெயாமோடு வளர்ந்த இளைஞர்களோ அவனிடம்,
"உன்னுடன் பேசிய ஜனங்களிடம் நீ சொல்ல வேண்டியது இதுதான்.
ஜனங்கள் உன்னிடம், 'உங்கள் தந்தை எங்கள் வாழ்க்கையைக்
கடினமாக்கிவிட்டார். இது பெருஞ்சுமையை சுமப்பது போல் உள்ளது.
ஆனால் நீங்கள் அந்தச் சுமையைக் குறைக்கவேண்டும் என்று
விரும்புகிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு இந்தப்
பதிலைத்தான் நீ கூறவேண்டும்: 'எனது சுண்டு விரலானது என்
தந்தையின் இடுப்பைவிடப் பெரியது! கக என் தந்தை உங்கள் மீது

அப்பொருட்களை வெளியே கொண்டு வரும்படி கருவூலக்காரனிடம் சொன்னான். அவனது பெயர் மித்திரேதாத். அவன் அதனை எடுத்து வந்து யூதாவின் தலைவனான சேஸ்பாத்சாரிடத்தில் கொடுத்தான்.
கூ கர்த்தருடைய ஆலயத்தில் இருந்து மித்திரேதாத் எடுத்து வந்த பொருட்களின் விபரம்: தங்கத் தட்டுகள் 30 வெள்ளித் தட்டுகள் 1,000 கத்திகளும், சட்டிகளும் 29
கo பொற்கிண்ணங்கள் 30 தங்கக் கிண்ணங்களைப் போன்ற வெள்ளிக் கிண்ணங்கள் 410 மற்ற தட்டுகள் 1,000
கக ஆக மொத்தம், பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டப் பொருட்கள் 5,400. கைதிகள் பாபிலோனில் இருந்து எருசலேமிற்குத் திரும்பிப் போனபோது சேஸ்பாத்சார் இப்பொருட்களைக் கொண்டு வந்தான்.

# உ

## திரும்பிச் சென்ற கைதிகளின் பட்டியல்

க அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த அப்பகுதி ஜனங்கள் இவர்கள். முன்பு, பாபிலோனின் அரசனான நேபுகாத்நேச்சார் இவர்களைப் பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டுபோயிருந்தான். இவர்கள் இப்போது எருசலேம் மற்றும் யூதாவிற்குத் திரும்பி வந்தார்கள். ஒவ்வொருவரும் தமது சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றார்கள்.
உ செருபாபேலோடு திரும்பிய ஜனங்களின் விபரம்: யெசுவா, நெகேமியா, செராயா, ரெலாயா, மொர்தெகாய், பில்சான், மிஸ்பார், பிக்வாய், ரேகூம், பானா. இஸ்ரவேலில் இருந்துதிரும்பிய ஜனங்களின் பெயர்களும் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:

ங பாரோஷின் சந்ததியினர்#2,172
ச செபத்தியாவின் சந்ததியினர்#372
ரு ஆராகின் சந்ததியினர்#775
சு யெசுவா மற்றும் யோவாபின் குடும்பத்திலிருந்து பாகாத் மோவாபின் சந்ததியினர்#2,812
எ ஏலாமின் சந்ததியினர்#1,254
அ சத்தூவின் சந்ததியினர்#945
கூ சக்காயின் சந்ததியினர்#760
கo பானியின் சந்ததியினர்#642
கக பெபாயின் சந்ததியினர்#623
கஉ அஸ்காதின் சந்ததியினர்#1,222
கங அதொனிகாமின் சந்ததியினர்#666
கச பிக்வாயின் சந்ததியினர்#2,056
கரு ஆதீனின் சந்ததியினர்#454
கசு எசேக்கியாவின் குடும்பம் வரைக்கும் அதேரின் சந்ததியினர்#98
கஎ பேசாயின் சந்ததியினர்#323
கஅ யோராகின் சந்ததியினர்#112
ககூ ஆசூமின் சந்ததியினர்#223

உ௦ கிபாரின் சந்ததியினர்#95
உக பெத்லகேமின் ஊரிலிருந்து#123
உஉ நெத்தோபாவின் ஊரிலிருந்து#56
உ௩ ஆனதோத்தின் ஊரிலிருந்து#128
உச அஸ்மாவேத்தின் ஊரிலிருந்து#42
உரு கீரியாத்யாரீம், கெபிரா,
பேரோத் ஆகியோர் ஊரிலிருந்து#743
உசு ராமா, காபா ஆகியோரின்
ஊரிலிருந்து#621
உஎ மிக்மாசின் ஊரிலிருந்து#122
உஅ பெத்தேல், ஆயி ஊரிலிருந்து#223
உகூ நேபோவின் ஊரிலிருந்து#52
௩௦ மக்பீஷின் ஊரிலிருந்து#156
௩க ஏலாமின் ஊரிலிருந்து#1,254
௩உ ஆரீமின் ஊரிலிருந்து#320
௩௩ லோத், ஆதீத், ஓனோ
ஊரிலிருந்து#725
௩ச எரிகோவின் ஊரிலிருந்து#345
௩ரு சேனாகின் ஊரிலிருந்து#3,630

௩சு பின்வரும் பட்டியல் ஆசாரியர்களுடையவை: யெசுவாவின்
குடும்பம் வழியாய் யெதாயாவின்
சந்ததியினர்#973
௩எ இம்மேரின் சந்ததியினர்#1,052
௩அ பஸ்கூரின் சந்ததியினர்#1,247
௩கூ ஆரீமின் சந்ததியினர்#1,017

ச௦ கீழே குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் லேவியின் கோத்திரத்தைச்
சார்ந்தவர்கள்:
ஓதாயாவின் குடும்பம் முடிய
யெசுவா மற்றும் கத்மியேல் சந்ததியினர்#74

சக பாடகர்கள்:
ஆசாபின் சந்ததியினர்#128

சஉ கீழ்வருபவர்கள் ஆலய வாசல் காவலாளர்களின் சந்ததியினர்:
சல்லூம், அதேர், தல்மோன்,
அக்கூப், அதிதா, சோபா சந்ததியினர்#139

ச௩ ஆலயச் சிறப்பு பணியாளர்களின் சந்ததியினர்:
சீகா, அசுபா, தபாகோத்,
சச கேரோஸ், சீயாகா, பாதோன்,
சரு லெபானாக், அகாபா, அக்கூப்,
சசு ஆகாப், சல்மாய், ஆனான்,
சஎ கித்தேல், காகார், ராயாக்,
சஅ ரேத்சீன், நெகோதா, காசாம்,
சகூ ஊசா, பாசெயா, பேசாய்,

௩௧ மிக்மாஸ் ஊரார்கள் 122
௩௨ பெத்தேல், ஆயி ஊரார்கள் 123
௩௩ வேறொரு நேபோ ஊரார்கள் 52
௩௪ மற்றொரு ஏலாம் ஊரார்கள் 1,254
௩௫ ஆரீம் ஊரார்கள் 320
௩௬ எரிகோ ஊரார்கள் 345
௩௭ லோத், ஆதீத், ஓனோ ஊரார்கள் 721
௩௮ செனாகா ஊரார்கள் 3,930

௩௯ ஆசாரியரானவர்கள்:
யெசுவா குடும்பத்தானாகிய யெதாயாவின்
சந்ததியினர் 973
௪௦ இம்மேரின் சந்ததியினர் 1,052
௪௧ பஸ்கூரின் சந்ததியினர் 1,247
௪௨ ஆரீமின் சந்ததியினர் 1,017

௪௩ லேவியின் கோத்திரத்தினர்:
ஓதியாவின் புத்திரருக்குள்ளே
கத்மியேல் மகனாகிய
யெசுவாவின் சந்ததியினர் 74

௪௪ பாடகரானவர்கள்:
ஆசாபின் சந்ததியினர் 148

௪௫ வாசல் காவலாளரானவர்கள்:
சல்லூம், அதேர், தல்மோன்,
அக்கூப், அதிதா, சோபா
ஆகியோரின் சந்ததியினர் 138

௪௬ இவர்கள் ஆலய பணியாளர்கள்:
சீகா, அசுபா, தபாகோத்தின் சந்ததியினர்
௪௭ கேரோஸ், சீயா, பாதோன்,
௪௮ லெபனா, அகாபா, சல்மா,
௪௯ ஆனான், கித்தேல், காகார்,
௫௦ ராயாக், ரேத்சீன், நெகோதா,
௫௧ காசாம், ஊசா, பாசெயாக்,
௫௨ பேசாய், மெயுநீம், நெபிஷசீம்,
௫௩ பக்பூக், அகுபா, அர்கூர்,
௫௪ பஸ்லீ, மெகிதா, அர்ஷா,
௫௫ பர்கோஷ், சிசெரா, தாமா,
௫௬ நெத்சியா, அதிபா.

௫௭ சாலொமோனது வேலைக்காரர்களின் சந்ததியினர்:
சோதா, சொபெரேத், பெரிதா,
௫௮ யாலா, தர்கோன், கித்தேல்,
௫௯ செபத்தியா, அத்தீல், பொகெரேத், ஆமோன்.

ந தான் பாதுகாப்பானவன் என எண்ணிய ஒரு மூடனைக் கண்டேன்.
ஆனால் திடீரென அவன் மாண்டான்.
ச யாரும் அவனது ஜனங்களுக்கு உதவ முடியவில்லை.
நியாயச் சபையில் அவர்களுக்கு ஆதரவளிப்பார் எவருமில்லை.
ரு அவர்களின் பயிர்களையெல்லாம் பசித்தோர் உண்டனர்.
முட்களின் நடுவே வளரும் தானியங்களையும் கூட பசியுள்ள அந்த ஜனங்கள் எடுத்துக்கொண்டனர்.
சா தூசிகளிலிருந்து தீயக் காலங்கள் வருவதில்லை.
பூமியிலிருந்து தொல்லை முளைப்பதில்லை.
எ ஆனால் மனிதனோ நெருப்பிலிருந்து பொறிகள் மேலே எழும்புவது எத்தனை நிச்சயமோ
அவ்வாறே, தொல்லையனுபவிக்கப் பிறந்திருக்கிறான்.
அ ஆனால் யோபுவே, நான் உன்னைப்போல் இருந்திருந்தால்,
தேவனிடம் திரும்பி என் கஷ்டங்களைக் கூறியிருப்பேன்.
கூ தேவன் செய்கிற அற்புதமான காரியங்களை ஜனங்கள் புரிந்துகொள்ள முடியாது.
தேவன் செய்கிற அதிசயங்களுக்கு முடிவேயில்லை.
க0 தேவன் பூமிக்கு மழையை அனுப்புகிறார்.
அவர் வயல்களுக்கு தண்ணீரை அனுப்புகிறார்.
கக எளிமையானவனைத் தேவன் உயர்த்துகிறார்,
அவர் துயரமுள்ளவனை மகிழ்ச்சியாக்குகிறார்.
கஉ புத்திசாலித்தனமுள்ள, தீயோரின் திட்டங்களை,
அவர்கள் வெற்றியடைய முடியாதபடி தேவன் தடுக்கிறார்.
கந ஞானமுள்ளோரையும் அவர்கள் கண்ணிகளிலேயே விழும்படி செய்து
புத்திசாலித்தனமான அத்திட்டங்கள் வெற்றியடைய முடியாதபடி தேவன் செய்கிறார்.
கச அத்தகைய திறமைசாலிகள் பகலிலேயே தடுமாறுகிறார்கள்.
இருளில் தன் பாதையைக் காணத் தடுமாறுகின்றவனைப்போல, அவர்கள் நண்பகலிலும் காணப்படுகிறார்கள்.
கரு தேவன் ஏழைகளைக் காப்பாற்றுகிறார்.
திறமைசாலிகளின் கைக்கும் அவர் ஏழைகளை கப்பாற்றுகிறார்.
கசா எனவே ஏழைகள் நம்பிக்கையோடிருக்கிறார்கள்.
நியாயமற்ற தீய ஜனங்களை தேவன் அழிக்கிறார்.

கஎ “தேவன் திருத்தும் மனிதன் பாக்கியவான்.
சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னைத் தண்டிக்கும்போது முறையிடாதே.
கஅ தேவன் தான் ஏற்படுத்தும் காயங்களைக் கட்டுகிறார்.
அவர் சிலருக்குக் காயமுண்டாக்கலாம், ஆனால் அவர் கைகளே அவற்றைக் குணமாக்கும்.
ககூ ஆறுவகை தொல்லைகளிலிருந்தும் அவர் உன்னைக் காப்பாற்றுவார்.
ஆம், ஏழு தொல்லைகளிலும் நீர் புண்படமாட்டீர்!

உ௦ பஞ்சக்காலத்திலும் தேவன் உன்னை மரணத்திலிருந்து காப்பாற்றுவார்.
போர்க் காலத்திலும் தேவன் உன்னை மரணத்திலிருந்து பாதுகாப்பார்!
உக தங்கள் கூரிய நாவுகளால் ஜனங்கள் உங்களைக் குறித்துத் தீயவற்றைக் கூறலாம்.
ஆனால் தேவன் உன்னைப் பாதுகாப்பார்.
தீயன நிகழும்போது நீ அஞ்சத் தேவையில்லை!
உஉ அழிவைக் கண்டும் பஞ்சத்தைப் பார்த்தும் நீ நகைப்பாய்.
காட்டு மிருகங்களைக் கண்டும் நீ அஞ்சமாட்டாய்.
உ௩ உன்னுடைய உடன்படிக்கையின்படி வயலின் பாறைகளும் கூட அந்த உடன்படிக்கையில் பங்குகொள்ளும்.
காட்டு மிருகங்களும் கூட உன்னோடு சமாதானம் செய்துக்கொள்ளும்.
உச உனது கூடாரம் பாதுகாப்பாக இருப்பதால் நீ சமாதானத்தோடு (அமைதியாக) வாழ்வாய்.
உனது கொத்துக்களை எண்ணிப் பார்த்து ஒன்றும் காணாமல் போகாதிருப்பதைக் காண்பாய்.
உரு உனக்குப் பல குழந்தைகள் பிறப்பார்கள்.
அவர்கள் பூமியின் புற்களைப்போன்று பலராவார்கள்.
உசு அறுவடைக்காலம் வரைக்கும் வளரும் கோதுமையைப்போல் நீர் இருப்பீர்.
ஆம், நீர் முதிர் வயதுவரைக்கும் வாழ்வீர்.

உஎ “யோபுவே, நாங்கள் இவற்றைக் கற்று, உண்மையென்று அறிந்திருக்கிறோம்.
எனவே, யோபுவே, நாங்கள் சொல்வதைக் கேட்டு, நீயாகவே அதைக் கற்றுக்கொள்” என்று கூறினான்.

# சு

## யோபு எலிப்பாசுக்குப் பதில் கூறுகிறான்

க அப்போது யோபு,

உ “என் துன்பங்களை நிறுத்துப் பார்க்கக் கூடுமானால், என் தொல்லைகள் தராசில் வைக்கப்படக் கூடுமானால்,
நீ என் துயரத்தைப் புரிந்துகொள்வாய்.
௩ கடற்கரை மணலைக் காட்டிலும் என் துயர் பாரமானது.
அதனால்தான் என் வார்த்தைகள் மூடத்தனமானவையாகத் தோன்றுகின்றன.
ச சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அம்புகள் என்னுள்ளே இருக்கின்றன.
அந்த அம்புகளின் விஷத்தை என் ஆவி பருகுகின்றது!
தேவனுடைய கொடிய ஆயுதங்கள் எனக்கெதிராக அணிவகுத்து நிற்கின்றன.
ரு எந்தத் தீமையும் நிகழாதபோது நீ கூறியவற்றைச் சொல்வது சுலபம் (எளிது).

தேவனை மறக்கும் மனிதனுக்கு எத்தகைய நம்பிக்கையும் அழிந்துப்போகும்.
கச அம்மனிதன் சாய்ந்து நிற்க எதுவுமில்லை.
அவன் பாதுகாவல் ஒரு சிலந்தி வலையைப் போன்றது.
கரு சிலந்தி வலையில் ஒருவன் சாய்ந்தால், அந்த வலை அறுந்துப்போகும்.
அவன் வலையைப் பற்றிக்கொள்வான், ஆனால் அது அவனைத் தாங்கிக்கொள்ளாது.
கசா அந்த மனிதனோ சூரிய ஒளி உதிக்கும் முன் இருக்கிற பச்சை செடியைப் போலிருக்கிறான்.
தோட்டம் முழுவதும் அதன் கிளைகள் பரவி நிற்கும்.
கஎ பாறைகளைச் சுற்றிலும் அதன் வேர்கள் படர்ந்திருக்கும்.
பாறைகளினூடே வளர்வதற்கு அது ஓர் இடம் தேடும்.
கஅ ஆனால் அத்தாவரத்தை அவ்விடத்திலிருந்து அகற்றினால் அது வாடிப்போகும்,
அது அங்கிருந்தது என்பதையும் ஒருவரும் அறியமாட்டார்கள்.
ககூ ஆனால், அத்தாவரம் மகிழ்ச்சியடைந்தது.
அது இருந்த இடத்தில் மற்றொரு தாவரம் முளைத்தது.
உ௦ தேவன் களங்கமற்றோரைக் கைவிடமாட்டார்.
அவர் கொடியோருக்கு உதவமாட்டார்.
உக தேவன் இன்னும் உமது வாயை நகைப்பினாலும்
உதடுகளை மகிழ்ச்சி ஆரவாரங்களினாலும் நிரப்புவார்.
உஉ ஆனால் உனது பகைவர்கள் வெட்கத்தை ஆடையாக அணிந்துகொள்வார்கள்.
தீய ஜனங்களின் வீடுகள் அழிக்கப்படும்" என்றான்.

## கூ

### யோபு பில்தாத்திற்குப் பதில் கூறுகிறான்.

க அப்போது யோபு,

உ "ஆம் நீர் கூறுவது உண்மையென அறிவேன்.
ஆனால் ஒரு மனிதன் எப்படி தேவனுக்கு முன் நீதிமானாயிருக்க முடியும்?
ங ஒருவன் தேவனிடம் வாதாட முடியாது!
தேவன் 1,000 கேள்விகளைக் கேட்கமுடியும், ஒருவனும் ஒரு கேள்விக்குக்கூட பதில் கூற முடியாது!
ச தேவன் மிகுந்த ஞானமுள்ளவர், அவரது வல்லமை மிகப்பெரியது!
ஒருவனும் தேவனோடு போராடி, காயமுறாமலிருக்க முடியாது.
ரு தேவன் கோபமாயிருக்கும்போது பர்வதங்களை அசைக்கிறார்,
அவை அதனை அறியாது.
சா பூமியை அசைக்கும்படி தேவன் பூமியதிர்ச்சியை அனுப்புகிறார்.
தேவன் பூமியின் அஸ்திபாரங்களை அசைக்கிறார்.
எ தேவன் சூரியனிடம் பேசமுடியும், அதை உதயமாகாமல் செய்யமுடியும்.
அவர் விண்மீன்களை ஒளிவிடாதபடி பூட்டமுடியும்.
அ தேவன் மட்டுமே வானங்களை உண்டாக்கினார்,

என் ஆத்துமா கசந்துபோயிற்று, எனவே நான் இப்போது பேசுவேன்.
உ நான் தேவனிடம், 'என்னைக் குற்றம்சாட்டாதேயும்!
நான் செய்தவற்றை எனக்குக் கூறும், எனக்கெதிராக உமது காரியம் என்ன?' என்பேன்.
ஈ 'தேவனே, என்னைத் துன்புறுத்துவது உமக்கு மகிழ்ச்சித் தருகிறதா?
நீர் உண்டாக்கினதைக் குறித்து நீர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது தீயோர் செய்த திட்டங்களில் நீர் மகிழ்ச்சிக்கொள்கிறீரா?
ச தேவனே, உமக்கு மனிதரின் கண்கள் உண்டா?
மனிதர் காண்பதுபோல் நீர் காரியங்களைப் பார்க்கிறீரா?
ரு எங்களைப்போல உமது வாழ்க்கையும் குறுகியதா?
மனிதனின் வாழ்க்கையைப் போல் உமது வாழ்க்கையும் குறுகியதா? இல்லை!
எனவே அது எப்படிப்பட்டது என்பதை எவ்வாறு அறிவீர்?
சு எனது தவறுகளைப் பார்க்கிறீர்,
என் பாவங்களைத் தேடுகிறீர்.
எ நான் களங்கமற்றவன் என்பதை நீர் அறிந்திருந்தும்
உமது ஆற்றலிலிருந்து தப்பித்துக்கொள்ள வழியில்லை!
அ தேவனே, உமது கைகள் என்னை உண்டாக்கி, என் உடலுக்கு வடிவளித்தன.
இப்போது அவை என்னை மூடிக்கொண்டு அழிக்கின்றன.
௬ தேவனே, என்னைக் களிமண்ணைப் போல உருவாக்கினீர் என நினைத்துப்பாரும்
என்னை மீண்டும் களிமண்ணாக மாற்றுவீரா?
௧0 என்னைப் பாலைப்போன்று வெளியே ஊற்றினீர்.
தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பவனைப் போன்று என்னைக் கடைந்து உருமாற்றினீர்.
௧௧ எலும்புகளாலும் தசைகளாலும் எனக்கு உருவளித்தீர்.
பின்னர் தோலாலும் தசையாலும் உடுத்தினீர்.
௧உ எனக்கு உயிரளித்தீர், என்னிடம் இரக்கமாயிருந்தீர்.
நீர் என்னை பராமரித்தீர், என் ஆவியைப் பாதுகாத்தீர்.
௧ஈ ஆனால் நீர் இதை உமது இருதயத்தில் மறைத்த வைத்திருக்கிறீர்.
நீர் இரகசியமாக உமது இருதயத்தில் திட்டமிட்டது இது என்பதை நான் அறிவேன்.
௧ச நான் பாவம் செய்தால், நீர் அதைக் கவனித்துக் கொண்டிருந்தீர்,
எனவே நீர் என் தவறுகளுக்கு என்னைத் தண்டிக்க முடியும்.
௧ரு நான் பாவம் செய்யும்போது குற்றவாளியாகிறேன், அது எனக்குத் தீமையானது.
ஆனால் நான் களங்கமற்றவனாயிருக்கும் போதும், என் தலையை உயர்த்திப்பார்க்க முடியவில்லை!
நான் வெட்கப்பட்டு அவமானமடைந்திருக்கிறேன்.
௧சு எனக்கு வெற்றி கிடைத்து நான் பெருமைப்பட்டால்,
ஒருவன் சிங்கத்தை வேட்டையாடுவதைப் போல என்னை வேட்டையாடுகிறீர்.

ரு நீங்கள் அமைதியாயிருக்க வேண்டும் என விரும்புகிறேன்.
நீங்கள் செய்யத்தக்க மிகுந்த ஞானமுள்ள காரியம் அதுவேயாகும்.

சு “இப்போது என் விவாதத்திற்கும் செவிகொடுங்கள்.
நான் சொல்லவேண்டியவற்றிற்குச் செவிகொடுங்கள்.
எ நீங்கள் தேவனுக்காகப் பொய் கூறுவீர்களா?
நீங்கள் கூறும் பொய்களை, நீங்கள் கூறவேண்டுமென்று தேவன் விரும்பியதாக நீங்கள் உண்மையாகவே நம்புகிறீர்களா?
அ எனக்கெதிராக தேவனை ஆதரித்துப் பேச முயன்றுகொண்டிருக்கிறீர்களா?
தேவனுக்காக வழக்குகள் கொண்டுவர முடியுமா?
கூ உங்களை தேவன் கூர்ந்து ஆராய்ந்தால், நீங்கள் சரியானவர்கள் என காண்பிப்பாரா?
நீங்கள் ஜனங்களை மூடராக்குவது போல் தேவனை முட்டாளாக்க முடியும் என உண்மையாகவே எண்ணுகிறீர்களா?
க० ஒரு மனிதன் முக்கியமானவன் என்பதால் மட்டும் நீதிமன்றத்தில் இரகசியமாக அவன் பக்கம் சாய முடிவுசெய்தால்,
தேவன் உங்களை விசாரணை செய்வார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.
கக தேவனுடைய மகத்துவம் (முக்கியத்துவம்) உங்களை அச்சுறுத்துகிறது.
நீங்கள் அவரைக் கண்டு பயப்படுகிறீர்கள்.
கஉ உங்கள் வாக்குவாதங்கள் சாம்பலைப் போல் எந்தப் பயனுமற்றவை.
உங்கள் பதில்கள் சேற்றுக்குவியல்கள் போலப் பயனற்றவை.

கரு “அமைதியாயிருங்கள், என்னைப் பேச விடுங்கள்!
பிறகு எனக்கு நேரிடும் அனைத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.
கச நான் என்னை ஆபத்திற்குட்படுத்தி
என் உயிரை என் கைகளில் எடுப்பேன்.
கரு தேவன் என்னைக் கொன்றாலும் நான் அவரைத் தொடர்ந்து நம்புவேன்.
அவருக்கு முன்பாக என் பொருட்டு வாதாடுவேன்.
கசு தேவன் என்னை வாழவிட்டால்,அது நான் அவரிடம் துணிந்து பேசியதன் விளைவாகும்.
தீயவன் ஒருவனும் தேவனை முகத்துக்கு முகம் பார்க்கத் துணிவதில்லை.
கஎ நான் சொல்கின்றவற்றிற்குக் கவனமாகச் செவி கொடுங்கள்.
நான் விவரித்துத் கூற அனுமதியுங்கள்.
கஅ நான் எனக்காக வாதாட தயாராயிருக்கிறேன்.
எனது வாதங்களைக் கவனமாகச் சொல்வேன்.
நான் குற்றமற்றவன் என்று தீர்க்கப்படுவேனென்று அறிவேன்.
ககூ நான் தவறென யாரேனும் நிரூபித்தால்
உடனே நான் வாய் பேசாதிருப்பேன் (அமைதியாக இருப்பேன்)

உ० “தேவனே, எனக்கு இரண்டு காரியங்களைத் தாரும்,

சு-ரு “தீயவனின் மகிழ்ச்சி நீண்டகாலம் நிலைக்காது என்பதை நீ அறிவாய்.
ஆதாம், பூமியில் வந்த காலம் முதல் அதுவே உண்மையாக உள்ளது.
தேவனைப்பற்றிக் கவலைப்படாதவனின் மகிழ்ச்சி குறுகிய காலமே நிலைக்கும்.
சு தீயவனின் பெருமை வானத்தை எட்டலாம்.
அவன் தலை மேகங்களைத் தொடலாம்.
எ அவன் தன் மலத்தைப்போலவே, என்றென்றும் அழிக்கப்படுவான்.
அவனை அறிந்த ஜனங்கள் ‘அவன் எங்கே?’ என்பார்கள்.
அ கனவைப்போன்று, அவன் பறந்துப் போவான்.
ஒருவனும் அவனைக் கண்டடைய முடியாது.
அவன் துரத்தப்பட்டு, ஒரு கெட்ட கனவாய் மறக்கப்படுவான்.
கூ அவனைப் பார்த்த ஜனங்கள் மீண்டும் அவனைக் காணமாட்டார்கள்.
அவன் குடும்பத்தினர் அவனை மீண்டும் பார்ப்பதில்லை.
க0 அவன் ஏழைகளிடமிருந்து எடுத்ததை அத்தீயவனின் பிள்ளைகள் திரும்பக் கொடுப்பார்கள்.
தீயவனின் சொந்தக் கைகளே அவனது செல்வத்தைத் திருப்பிக் கொடுக்கும்.
கக அவன் இளைஞனாயிருந்தபோது, அவன் எலும்புகள் பெலனுள்ளவையாக இருந்தன.
ஆனால், உடம்பின் பிற பகுதிகளைப்போன்று, அவை விரைவில் துகளில் கிடக்கும்.

கஉ “கெட்ட மனிதனின் வாய் தீமையை இனிமையாக ருசிக்கும்.
அவன் அதை முழுவதும் சுவைப்பதற்காக அவனது நாவின் அடியில் வைப்பான்.
கந கெட்ட மனிதன் தீமையில் களிப்பான்.
அவன் அதை விட்டுவிட விரும்பமாட்டான்.
அது அவனது வாய்க்குள்ளிருக்கும் இனிப்பைப் போலிருக்கும்.
கச ஆனால் அத்தீமை அவன் வயிற்றில் நஞ்சாகும்.
பாம்பின் விஷத்தைப்போன்று அது அவனுள் கசப்பான விஷமாக மாறும்.
கரு தீயவன் செல்வங்களை விழுங்கியிருக்கிறான்.
ஆனால் அவன் அவற்றை வாந்தியெடுப்பான்.
தீயவன் அவற்றை வாந்தியெடுக்கும்படி தேவன் செய்வார்.
கசு பாம்புகளின் விஷத்தைப்போன்று, தீயவன் பருகும் பானமும் இருக்கும்.
பாம்பின் நாக்கு அவனைக் கொல்லும்.
கஎ அப்போது, அத்தீயவன் தேனாலும் பாலாலும் ஓடுகிற நதிகளைக் கண்டு களிக்கமாட்டான்.
கஅ தீயவன், அவன் சம்பாதித்த செல்வங்களையெல்லாம் திருப்பித் தரும்படி கட்டாயப்படுத்தப்படுவான்.
தன்னுடைய உழைப்பின் பலனை அவன் அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டான்.

வெவ்வேறு வகைகளில் தேவன் பேசலாம், ஆனால் ஜனங்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள்.
கரு-கசு தேவன் கனவில் ஜனங்களோடு பேசலாம், அல்லது இரவில் அவர்கள் ஆழ்ந்த நித்திரைக் கொள்ளும்போது தரிசனம் தந்து பேசலாம்,
அவர்கள் தேவனுடைய எச்சரிக்கையைக் கேட்கும்போது மிகவும் அச்சம்கொள்ளலாம்.
கஎ ஜனங்கள் தவறு செய்வதை நிறுத்தவும்
பெருமைகொள்வதை விடவும் தேவன் எச்சரிக்கை செய்கிறார்.
கஅ மரணத்தின் இடத்திற்குப் போகாதபடி அவர்களைக் காப்பதற்காக தேவன் ஜனங்களை எச்சரிக்கிறார்.
ஒருவன் அழியாதபடி காப்பதற்கு தேவன் அவ்வாறு செய்கிறார்.

கசூ “அல்லது ஒருவன் படுக்கையில் கிடந்து தேவனுடைய தண்டனையை அனுபவிக்கும்போது ஒருவன் தேவனுடைய சத்தத்தைக் கேட்கக்கூடும்.
வேதனையால் அம்மனிதனை தேவன் எச்சரிக்கிறார்.
எலும்பெல்லாம் நொறுங்கும்படி அம்மனிதன் நோவை அனுபவிக்கிறான்.
உ௦ அப்போது அம்மனிதன் உண்ணமுடியாது.
மிகச் சிறந்த உணவையும் வெறுக்கும்படி அவன் மிகுந்த நோவை அனுபவிக்கிறான்.
உக அவன் மிகவும் மெலிந்து எலும்புகள் வெளித் தோன்றும்வரை
அவன் உடம்பு மெலிந்து போகும்.
உஉ அம்மனிதன் மரணத்தின் இடத்திற்கு அருகே இருக்கிறான்.
அவன் வாழ்க்கை மரணத்திற்கு அருகாமையில் உள்ளது.
உ௩ தேவனிடம் ஆயிரக்கணக்காக தூதர்கள் இருப்பார்கள்.
அத்தூதர்களுள் ஒருவன் அம்மனிதனைக் கண்ணோக்கிக் கொண்டிருக்கலாம். அந்த தூதன் அம்மனிதனுக்காகப் பரிந்துபேசி அவன் செய்த நற்செயல்களை எடுத்துரைக்கலாம்.
உச அந்த தூதன் அம்மனிதனிடம் இரக்கம் காட்டலாம்.
அத்தூதன் தேவனிடம், ‘மரணத்தின் இடத்திலிருந்து அம்மனிதனைக் காப்பாற்றும்.
அவன் பாவத்திற்குப் பரிகாரமாக நான் ஒரு வழியைக் கண்டு பிடித்திருக்கிறேன்’ எனலாம்.
உரு அப்போது அம்மனிதனின் உடல் மீண்டும் இளமையும், வலிமையும் பெறும்.
அவன் இளமையிலிருந்தாற்போன்று இருப்பான்.
உசூ தேவனிடம் ஜெபிப்பான், தேவன் அவனுடைய ஜெபத்திற்குப் பதில் தருவார்.
அம்மனிதன் களிப்பால் ஆரவாரித்து, தேவனைத் தொழுதுகொள்வான்.
அப்போது அம்மனிதன் மீண்டும் நல்வாழ்க்கை வாழ்வான்.
உஎ அப்போது அம்மனிதன் ஜனங்களிடம் அறிக்கையிடுவான்.
அவன், ‘நான் பாவம் செய்தேன்.
நான் நல்லதைக் கெட்டதாக்கினேன்.

## சுு

செமினீத்தால் நரம்புக் கருவிகளை இசைப்போரின் இராகத் தலைவனுக்கு தாவீது தந்த பாடல்

க கர்த்தாவே, கோபத்தில் என்னைக் கண்டிக்காதிரும்.
என் மீது கோபமடையாமலும் என்னைத் தண்டியாமலும் இரும்.
உ கர்த்தாவே, என்னிடம் தயவாயிரும். நான் நோயுற்றுத் தளர்ந்தேன்.
என்னைக் குணமாக்கும்!
என் எலும்புகள் நடுங்குகின்றன.
ந என் முழு உடம்பும் நடுங்குகிறது.
கர்த்தாவே, நீர் என்னைக் குணப்படுத்த எவ்வளவு காலம் நீடிக்கும்?
ச கர்த்தாவே, என்னை வலிமையாக்கும்.
நீர் தயவுள்ளவர், என்னைக் காப்பாற்றும்.
ரு கல்லறையிலுள்ள மரித்த மனிதர்கள் உம்மை நினையார்கள்.
மரணத்தின் இடத்திலுள்ள ஜனங்கள் உம்மைத் துதிக்கமாட்டார்கள்.
எனவே என்னை நீர் குணமாக்கும்!

சு கர்த்தாவே, இரவு முழுவதும் நான் உம்மிடம் ஜெபம் செய்தேன்.
என் கண்ணீரால் என் படுக்கை நனைந்தது.
என் படுக்கையிலிருந்து கண்ணீர் சிந்துகின்றது.
உம்மை நோக்கி அழுவதால் நான் பெலனற்றுப்போகிறேன்.
எ எனது பகைவர்கள் எனக்குத் துன்பம் பல செய்தனர்.
வருத்தத்தால் என் துயரம் பெருகிற்று.
தொடர்ந்து அழுவதினால் என் கண்கள் சோர்ந்தன.

அ தீயோரே அகன்று போங்கள்!
ஏனெனில் கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்.
கூ கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்.
கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு பதில் தந்தார்.

க0 எனது எதிரிகள் எல்லோரும் மனமுடைந்து கலங்கினார்கள்.
ஏதோ திடீரென நிகழும், அவர்கள் வெட்கமுற்றுத் திரும்பிச் செல்வார்கள்.

## எ

கர்த்தரை நோக்கி தாவீது பாடிய பாடல், பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்த கீசின் மகனாகிய சவுலைப்பற்றியது இந்தப் பாடல்

க எனது தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மை நம்புகிறேன்.
என்னைத் துரத்தும் மனிதரிடமிருந்து என்னைக் காப்பாற்றும்.
என்னை மீட்டுக்கொள்ளும்!
உ நீர் எனக்கு உதவாவிட்டால், சிங்கத்தால் பிடிக்கப்பட்ட மிருகத்தைப் போலாவேன்.
என்னைக் கவர்ந்து செல்கையில் யாரும் என்னைக் காப்பாற்ற இயலாது!

ந எனது தேவனாகிய கர்த்தாவே, நான் தவறு ஒன்றும் செய்யவில்லை.
நான் தவறிழைக்க வில்லையென்று உறுதியளிக்கிறேன்!

தேசம் முழுவதும் அவர்களை ஆளச் செய்வீர்.
கஎ உமது நாமத்தை என்றென்றும் புகழ் பெறச் செய்வேன்.
என்றென்றும் ஜனங்கள் உம்மைத் துதிப்பார்கள்.

## சசா

அலமோத் என்னும் கருவியில் வாசிக்கும்படி கொடுக்கப்பட்ட கோராகின் குடும்பத்தின் இராகத் தலைவனுக்கு, ஒரு பாடல்

க தேவன் நம் வல்லமையின் ஊற்றாயிருக்கிறார்.
தொல்லைகள் சூழ்கையில் நாம் அவரிடமிருந்து எப்பொழுதும் உதவி பெறலாம்.
உ எனவே பூமி நடுங்கினாலும்,
மலைகள் கடலில் வீழ்ந்தாலும் நாம் அஞ்சோம்.
ங கடல் கொந்தளித்து இருள் சூழ்ந்தாலும்
பர்வ தங்கள் நடுங்கி அதிர்ந்தாலும் நாம் அஞ்சோம்.

ச உன்னத தேவனுடைய பரிசுத்த நகரத்திற்கு,
மகிழ்ச்சி அளிக்கிற ஓடைகளையுடைய நதி ஒன்று இருக்கிறது.
ரு அந்நகரம் அழியாதபடி தேவன் அங்கிருக்கிறார்.
சூரிய உதயத்திற்குமுன் தேவன் அதற்கு உதவுவார்.
சா தேசங்கள் பயத்தால் நடுங்கும்.
கர்த்தர் சத்தமிடுகையில் அந்த இராஜ்யங்கள் விழும், பூமி சீர்குலையும்.
எ சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நம்மோடிருக்கிறார்.
யாக்கோபின் தேவன் நமது பாதுகாப்பிடம்.

அ கர்த்தர் செய்யும் வல்லமை மிக்க காரியங்களைப் பாருங்கள்.
அவர் பூமியின்மேல் செய்துள்ள பயத்திற்குரிய காரியங்களைப் பாருங்கள்.
கூ பூமியில் எவ்விடத்தில் போர் நிகழ்ந்தாலும் கர்த்தர் அதை நிறுத்த வல்லவர்.
வீரர்களின் வில்லுகளை அவர் முறித்து அவர்கள் ஈட்டிகளைச் சிதறடிக்கிறார்.
இரதங்களை நெருப்பினால் அழிக்க தேவன் வல்லவர்.

க0 தேவன், “நீங்கள் சண்டையிடுவதை நிறுத்தி அமைதியாயிருந்து நானே தேவன் என உணருங்கள்!
நான் பூமியில் பெருமையுற்று தேசங்களில் வாழ்த்தப்படுவேன்” என்று கூறினார்.

கக சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நம்மோடிருக்கிறார்.
யாக்கோபின் தேவன் நமது பாதுகாப்பிடம்.

## சஎ

கோராகின் குடும்பத்தின் இராகத் தலைவனுக்கு அளிக்கப்பட்ட ஒரு பாடல்

க சகல ஜனங்களே, கைகளைத் தட்டுங்கள்,
தேவனை நோக்கி மகிழ்ச்சியால் சத்தமிடுங்கள்.

என்றென்றும் வாழும்படி கர்த்தர் அம்மலையைத் தேர்ந்தெடுத்தார்.
கஎ பரிசுத்த சீயோன் மலைக்குக் கர்த்தர் வருகிறார்.
அவரை இலட்சக்கணக்கான இரதங்கள் பின் தொடருகின்றன.
கஅ உயர்ந்த மலையில் அவர் ஏறினார்.
சிறைப்பட்டோரின் கூட்டத்தை அவர் வழிநடத்தினார்.
எதிராகத் திரும்பியவர்கள் உட்பட, மனிதரிடமிருந்து அவர் பரிசுகளை ஏற்றார்.
தேவனாகிய கர்த்தர் அங்கு வசிப்பதற்கு ஏறிச்சென்றார்.
கசூ கர்த்தரைத் துதியுங்கள்!
ஒவ்வொரு நாளும் நாம் சுமக்கவேண்டிய பாரங்களைச் சுமப்பதற்கு அவர் உதவுகிறார்.
தேவன் நம்மை மீட்கிறார்.

உ௦ அவரே நமது தேவன் அவரே நம்மை மீட்கும் தேவன்.
நமது தேவனாகிய கர்த்தர் நம்மை மரணத்திலிருந்து காப்பாற்றுகிறார்.
உக தேவன் அவரது பகைவர்களைத் தோற்கடிக்கிறார் என்பதைக் காட்டுகிறார்.
அவரை எதிர்த்த ஜனங்களை தேவன் தண்டிக்கிறார்.
உஉ என் ஆண்டவர், “பாசானிலிருந்து பகைவனை வரவழைப்பேன்.
மேற்கிலிருந்து பகைவனை வரவழைப்பேன்.
உங நீ அவர்களின் இரத்தத்தில் நடப்பாய்,
உன் நாய்கள் அவர்களின் இரத்தத்தை நக்கும்” என்றார்.
உச வெற்றி ஊர்வலத்தை தேவன் நடத்திச் செல்வதை பாருங்கள்.
என் அரசராகிய பரிசுத்த தேவன் வெற்றி ஊர்வலத்தை நடத்திச் செல்வதை ஜனங்கள் காண்பார்கள்.
உரு பாடகர் முன்னால் வீர நடையிட்டுச் செல்வார்கள்.
பின்னர் தம்புரு மீட்டும் இளம் பெண்கள் வருவார்கள்.
இசைக் கலைஞர்கள் பின்னே வீர நடையிடுவார்கள்.
உசூ சபைக்கூடும் கூட்டத்தில் தேவனைத் துதியுங்கள்!
இஸ்ரவேலின் ஜனங்களே, கர்த்தரைத் துதியுங்கள்!
உஎ சின்ன பென்யமீன் அவர்களை வழிநடத்திச் செல்கிறான்.
அங்கு யூதாவின் பெரிய குடும்பமும் இருக்கிறது.
அங்கு செபுலோன், நப்தலியின் தலைவர்களும் உள்ளனர்.

உஅ தேவனே, எங்களுக்கு உமது வல்லமையைக் காட்டும்!
கடந்த காலத்தில் எங்களுக்காய் பயன்படுத்தின உமது வல்லமையைக் காட்டும்.
உசூ எருசலேமிலுள்ள உமது அரண்மனைக்கு,
அரசர்கள் தங்கள் செல்வத்தை உமக்காகக் கொண்டு வருவார்கள்.
ங௦ நீர் விரும்புவதை அந்த “மிருகங்கள்” செய்யும்படி உமது கோலைப் பயன்படுத்தும்.
அத்தேசங்களின் “காளைகளும்” “பசுக்களும்” உமக்குக் கீழ்ப்படியச் செய்யும்.
போரில் அத்தேசங்களை நீர் வென்றீர்.
இப்போது அவர்கள் வெள்ளியை உம்மிடம் கொண்டுவரச்செய்யும்.

அந்த ஏழை ஜனங்களின் உயிர்கள் அரசனுக்கு மிக முக்கியமானவை.
கரு அரசன் நீடூழி வாழ்க!
அவர் சேபாவின் பொன்னைப் பெறட்டும்.
எப்போதும் அரசனுக்காக ஜெபம் செய்யுங்கள்.
ஒவ்வொரு நாளும் அவரை ஆசீர்வதியுங்கள்.
கசு வயல் நிலங்கள் மிகுதியான தானியத்தை விளைவிக்கட்டும்.
மலைகளும் பயிர்களால் நிரம்பட்டும்.
நிலங்களில் புல் வளர்வது போன்று
நகரங்கள் ஜனங்களால் நிரம்பட்டும்.
கஎ அரசன் என்றென்றும் புகழ்பெறட்டும்.
சூரியன் ஒளிவிடும்மட்டும் ஜனங்கள் அவர் நாமத்தை நினைவுகூரட்டும்.
ஜனங்கள் அவரால் ஆசீர்வதிக்கப்படட்டும்.
அவர்கள் எல்லோரும் அவரை வாழ்த்தட்டும்.

கஅ இஸ்ரவேலரின் தேவனாகிய, கர்த்தராகிய தேவனைத் துதியுங்கள்.
தேவன் ஒருவரே அத்தகைய அற்புதமான காரியங்களைச் செய்யமுடியும்.
ககூ அவரது மகிமைபொருந்திய நாமத்தை என்றென்றும் துதியுங்கள்!
அவரது மகிமை முழு உலகத்தையும் நிரப்பட்டும்! ஆமென், ஆமென்!
உ0 ஈசாயின் மகனாகிய தாவீதின் ஜெபங்கள் இங்கு முடிகின்றன.

# புத்தகம் 3

## எ௩

*(சங்கீதம் 73-89)*

ஆசாபின் துதிப்பாடல்

க தேவன் உண்மையாகவே இஸ்ரவேலுக்கு நல்லவர்.
பரிசுத்த இருதயமுள்ள ஜனங்களுக்கு தேவன் நல்லவர்.
உ நான் தவறி வீழ்ந்து,
பாவம் செய்யத் தொடங்கும் நிலையில் இருந்தேன்.
௩ கெட்ட ஜனங்கள் வெற்றியடைந்ததைக் கண்டேன்.
பெருமைபாராட்டும் அந்த ஜனங்களைக் கண்டு பொறாமைகொள்ள ஆரம்பித்தேன்.
ச அந்த ஜனங்கள் ஆரோக்கியமுள்ளவர்கள்.
வாழ்வதற்கு அவர்கள் போராட வேண்டாம்.
ரு எங்களைப்போல அந்தப் பெருமைக்காரர்கள் தொல்லைப்படுவதில்லை.
பிறரைப்போன்று அவர்களுக்குத் தொல்லைகள் இல்லை.
சு எனவே அவர்கள் பெருமைமிக்கவர்களாய், வெறுக்கத்தக்கவர்களாய் உள்ளனர்.
அவர்கள் அணியும் அணிகலன்களையும் அழகிய ஆடைகளையும் போன்று அது விரைவில் கண்டுகொள்ளத்தக்கது.
எ தாங்கள் பார்க்கும் எதையும் அந்த ஜனங்கள் விருப்பினால் போய் தங்களுக்கென அதை எடுத்துக்கொள்கின்றனர்.

ரு உமது ஜனங்களுக்கு நீர் கண்ணீரையே உணவாகக் கொடுத்தீர்.
உமது ஜனங்களின் கண்ணீர் நிரம்பிய பாத்திரத்தையே உமது ஜனங்களுக்கு நீர் கொடுத்தீர்.
அதுவே அவர்கள் பருகும் தண்ணீராயிற்று.
சு எங்கள் சுற்றத்தினர் சண்டையிடுவதற்கான பொருளாக எங்களை மாற்றினீர்.
எங்கள் பகைவர்கள் எங்களைப் பார்த்து நகைக்கிறார்கள்.
எ சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளும்.
எங்களை ஏற்றருளும், எங்களைக் காப்பாற்றும்.
அ கடந்த காலத்தில் எங்களை முக்கியமான ஒரு தாவரத்தைப்போன்று நடத்தி வந்தீர்.
நீர் உமது “திராட்சைக்கொடியை” எகிப்திலிருந்து கொண்டுவந்தீர்.
இத்தேசத்திலிருந்து பிறர் விலகிப்போகுமாறு கட்டாயப்படுத்தினீர்.
உமது “திராட்சைக் கொடியை” நீர் இங்கு நட்டு வைத்தீர்.
கூ “திராட்சைக்கொடிக்காக” நீர் நிலத்தைப் பண்படுத்தினீர்.
அதன் வேர்கள் வேரூன்றிச் செல்வதற்கு நீர் உதவினீர்.
உடனே அத் “திராட்சைக்கொடி” தேசமெங்கும் படர்ந்தது.
க௦ அது பர்வதங்களை மூடிற்று.
அதன் இலைகள் பெரும் கேதுரு மரங்களுக்கு நிழல் தந்தன.
கக அதன் கொடிகள் மத்தியதரைக் கடல் வரைக்கும் படர்ந்தது.
அதன் கிளைகள் ஐபிராத்து நதிவரைக்கும் சென்றது.
கஉ தேவனே, உமது “திராட்சைக்கொடி”யைப் பாதுகாக்கும் சுவர்களை ஏன் இடித்துத் தள்ளினீர்?
இப்போது வழிநடந்து செல்பவன் ஒவ்வொருவனும் திராட்சைக் கனிகளைப் பறித்துச் செல்கிறான்.
கங காட்டுப்பன்றிகள் வந்து உமது “திராட்சைக் கொடியின்” மீது நடந்து செல்கின்றன.
காட்டு மிருகங்கள் வந்து அதன் இலைகளைத் தின்கின்றன.
கச சர்வ வல்லமையுள்ள தேவனே, மீண்டும் வாரும்.
பரலோகத்திலிருந்து கீழே உமது “திராட்சைக்கொடி”யைப் பார்த்து அதனைப் பாதுகாத்துக்கொள்ளும்.
கரு தேவனே, உமது கைகளால் நட்ட “திராட்சைக் கொடியைப்” பாரும்.
நீர் வளர்த்தெடுத்த இளமையான செடியை நீர் பாரும்.
கசு உலர்ந்த சருகைப்போல் உமது “திராட்சைக் கொடி” நெருப்பில் எரிக்கப்பட்டது.
நீர் அதனிடம் கோபங்கொண்டு, அதனை அழித்தீர்.

கஎ தேவனே, உமது வலது பக்கத்தில் நின்ற உமது மகனை நெருங்கும்.
நீர் வளர்த்தெடுத்த உமது மகனிடம் நெருங்கி வாரும்.
கஅ அவர் மீண்டும் உம்மை விட்டுச் செல்லமாட்டார்.
அவர் வாழட்டும், அவர் உமது நாமத்தைத் தொழுதுகொள்வார்.
ககூ சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரே, எங்களிடம் மீண்டும் வாரும்.
எங்களை ஏற்றுக்கொள்ளும், எங்களைக் காப்பாற்றும்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நான் உம்மிடம் ஜெபம் செய்கிறேன்.
கச கர்த்தாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்?
ஏன் எனக்குச் செவிகொடுக்க மறுக்கிறீர்?
கரு என் இளமைப் பருவத்திலிருந்தே நான் சோர்ந்து நோயாளியாயிருக்கிறேன்.
உமது கோபத்தால் துன்புற்றேன், நான் திக்கற்றவன்.
கசு கர்த்தாவே, நீர் என்னிடம் கோபம் கொண்டிருந்தீர்.
உமது தண்டனை என்னைக் கொன்று கொண்டிருக்கிறது.
கஎ வலியும் நோயும் எப்போதும் என்னை வருத்துகின்றன.
என் வலியிலும் நோயிலும் நான் அமிழ்ந்துகொண்டிருப்பதாக உணருகிறேன்.
கஅ கர்த்தாவே, என் நண்பர்களையும், அன்பர்களையும், என்னை விட்டு விலகுமாறு செய்தீர்.
இருள் மட்டுமே என்னிடம் நிலைகொண்டது.

# அகூ

## எஸ்ராகியனாகிய ஏத்தானின் ஒரு மஸ்கீல்

க கர்த்தருடைய அன்பைக்குறித்து என்றைக்கும் நான் பாடுவேன்.
என்றென்றுமுள்ள அவரது உண்மையைப்பற்றி நான் பாடுவேன்.
உ கர்த்தாவே, உமது அன்பு என்றென்றும் நிலைக்கும் என்று உண்மையாகவே நான் நம்புகிறேன்.
உமது உண்மை வானத்தைப்போலத் தொடர்கிறது.

ந தேவன், "நான் தேர்ந்தெடுத்த அரசனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டேன்.
ச தாவீதே, உன் குடும்பம் என்றென்றும் நிலைத்திருக்கும்படிச் செய்வேன்.
என்றென்றைக்கும் உமது அரசு தொடருமாறு செய்வேன்" என்றார்.

ரு கர்த்தாவே, நீர் வியக்கத்தக்க காரியங்களைச் செய்கிறீர்.
விண்ணுலகம் இதற்காக உம்மைத் துதிக்கும்.
ஜனங்கள் உம்மைச் சார்ந்திருக்கமுடியும்.
பரிசுத்தரின் கூட்டம் இதைப்பற்றிப் பாடும்.
சு பரலோகத்தில் கர்த்தருக்கு நிகரானவர் எவருமில்லை.
"தெய்வங்களில்" எவரையும் கர்த்தரோடு ஒப்பிட முடியாது.
எ தேவன் பரிசுத்தமானவரைச் சந்திக்கிறார்.
அவருடைய தூதர்கள் அவரைச் சுற்றியிருப்பார்கள்.
அவர்கள் தேவனுக்குப் பயந்து அவரை மதிப்பார்கள்.
அவரைக் கண்டு பயபக்தியோடு நிற்பார்கள்.
அ சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்மைப் போன்றோர் வேறெவருமில்லை.
உம்மை நாங்கள் முழுமையாக நம்பமுடியும்.
கூ நீர் பெருமிதத்தோடு கடலை ஆளுகிறீர்.
அதன் கோபமான அலைகளை நீர் அமைதிப்படுத்த முடியும்.
கo தேவனே, நீர் ராகாபைத் தோற்கடித்தீர்.

தீயோர் என்றென்றும் அழிந்து போவார்களாக.
என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி!
கர்த்தரை துதியுங்கள்!

# க0ரு

க கர்த்தருக்கு நன்றி கூறுங்கள்.
அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்.
அவர் செய்யும் அற்புதங்களைத் தேசங்களுக்குக் கூறுங்கள்.
உ கர்த்தரை நோக்கிப் பாடுங்கள்.
அவருக்குத் துதி களைப் பாடுங்கள்.
அவர் செய்யும் வியக்கத் தக்க காரியங்களைக் குறித்துக் கூறுங்கள்.
ங கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்துப் பெருமைகொள்ளுங்கள்.
ஜனங்களாகிய நீங்கள் கர்த்தரைத் தேடிவந்தீர்கள். சந்தோஷமாயிருங்கள்!
ச வல்லமைக்காகக் கர்த்தரிடம் போங்கள்.
உதவிக்காக எப்போதும் அவரிடம் போங்கள்.
ரு அவர் செய்யும் வியப்பிற்குரிய காரிங்களை நினைவுகூருங்கள்.
அவர் செய்த அதிசயங்களை யும் ஞானமுள்ள முடிவுகளையும் எண்ணிப் பாருங்கள்.
சு நீங்கள் அவரது பணியாளாகிய ஆபிரகாமின் சந்ததியினர்.
நீங்கள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட யாக்கோபின் சந்ததியினர்.
எ கர்த்தரே நமது தேவன்.
கர்த்தர் உலகம் முழுவதையும் ஆளுகிறார்.
அ தேவனுடைய உடன்படிக்கையை என்றென்றும் நினைவுகூருங்கள்.
ஆயிரம் தலைமுறை வரையிலும் அவரது கட்டளைகளை நினைவுகூருங்கள்.
கூ தேவன் ஆபிரகாமோடு ஒரு உடன்படிக்கை செய்தார்.
தேவன் ஈசாக்கோடு ஒரு வாக்குறுதி யைச் செய்தார்.
க0 பின்பு அவர் அதனை யாக்கோபிற்கு ஒரு சட்டமாகச் செய்தார்.
தேவன் இஸ்ரவேலோடு ஒரு உடன்படிக்கை செய்தார்.
அது என்றென்றும் தொடரும்!
கக தேவன்: "நான் கானானின் தேசத்தை உனக்குக் கொடுப்பேன்.
அத்தேசம் உனக்குச் சொந்தமாகும்" என்றார்.
கஉ ஆபிரகாமின் குடும்பம் சிறியதாயிருந்தபோது தேவன் அவ்வாக்குறுதியை அளித்தார்.
அவர்கள் அங்கு அந்நியராகச் சில காலத்தைக் கழித்தனர்.
கங அவர்கள் ஒரு அரசிலிருந்து மற்றோர் அரசிற்கும்,
ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கும் பயணம் செய்தார்கள்.
கச ஆனால் ஜனங்கள் அவர்களைத் தகாதபடி நடத்த தேவன் அனுமதிக்கவில்லை.

பிற நாடுகளிலும்நீர் உமது பகைவர்களை ஆளும்வரைக்கும் அது பெருகும்.
ங நீர் உமது படையை ஒன்று திரட்டும்போது
உமது ஜனங்கள் தாங்களே விருப்பத்துடன் வருவார்கள்
அவர்கள் சிறப்பு ஆடைகளை அணிவார்கள்.
அவர்கள் அதிகாலையில் சந்திப்பார்கள்.
அந்த இளைஞர்கள்
தரைமேல் உள்ள பனித்துளியைப்போல் உம்மைச் சுற்றி இருப்பார்கள்.

ச கர்த்தர் ஒரு வாக்குறுதி அளித்தார்.
அவர் மனம் மாறமாட்டார்.
“நீர் என்றென்றும் ஆசாரியராயிருப்பீர்.
மெல்கிசேதேக்கைப் போன்ற ஆசாரியராயிருப்பீர்.”

ரு என் ஆண்டவர் உமது வலது பக்கம் இருக்கிறார்.
அவர் கோபமடையும்போது மற்ற அரசர்களைத் தோற்கடிப்பார்.
சு தேவன் தேசங்களை நியாயந்தீர்ப்பார்.
பூமி பிரேதங்களால் நிரப்பப்படும்.
தேவன் வல்லமையுள்ள நாட்டின் தலைவர்களை தண்டிப்பார்.

எ வழியின் நீரூற்றில் அரசர் தண்ணீரை பருகுகிறார்.
அவர் உண்மையாகவே அவரது தலையை உயர்த்தி, மிகுந்த ஆற்றலோடு காணப்படுவார்!

# ககக

க கர்த்தரைத் துதியங்கள்!
நல்லோர் கூடிச் சந்திக்கும் கூட்டங்களில் நான் கர்த்தருக்கு முழு இருதயத்தோடும் நன்றி செலுத்துவேன்.
உ கர்த்தர் அற்புதமான காரியங்களைச் செய்கிறார்.
தேவனிடமிருந்து வரும் நல்ல காரியங்களை ஜனங்கள் விரும்புகிறார்கள்.
ங உண்மையிலேயே மகிமையும் அற்புதமுமான காரியங்களை தேவன் செய்கிறார்.
அவரது நன்மை என்றென்றைக்கும் தொடருகிறது.
ச கர்த்தர் தயவும் இரக்கமுமுள்ளவர் என்பதை நாம் நினைவுக்கூரும்படி
தேவன் வியக்கத்தக்க காரியங்களைச் செய்கிறார்.
ரு தேவன் அவரைப் பின்பற்றுவோருக்கு உணவளிக்கிறார்.
அவரது உடன்படிக்கையை தேவன் என்றென்றும் நினைவுகூருகிறார்.
சு அவர் தமது தேசத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுக்கப்போகிறார் என்பதை
தேவன் செய்த வல்லமையான காரியங்கள் காட்டும்.
எ தேவன் செய்பவை ஒவ்வொன்றும் நல்லவையும் நியாயமுள்ளவையும் ஆகும்.

உ நான் உதவிக்காகக் கூப்பிடும்போது அவர் எனக்குச் செவிகொடுப்பதை
நான் நேசிக்கிறேன்.
ங நான் மரித்தவன் போலானேன்!
மரணக் கயிறுகள் என்னைச் சூழ்ந்துக்கொண்டன, கல்லறை என்னை மூடிற்று.
நான் அஞ்சிக் கலங்கினேன்.
ச அப்போது நான் கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிட்டேன்.
நான்: "கர்த்தாவே, என்னைக் காப்பாற்றும்!" என்று கூறினேன்.
ரு கர்த்தர் நல்லவரும், இரக்கம் நிறைந்தவருமாவார்.
தேவன் தயவுள்ளவர்.
சு கர்த்தர் திக்கற்ற ஜனங்களைக் கவனித்துக்கொள்கிறார்.
நான் உதவியற்றவனானேன், கர்த்தர் என்னைக் காப்பாற்றினார்.
எ என் ஆத்துமாவே, நீ இளைப்பாறு!
கர்த்தர் உன்னைக் கவனித்துக்கொள்கிறார்.
அ தேவனே, நீர் என் ஆத்துமாவை மரணத்திலிருந்து காப்பாற்றினீர்.
நீர் என் கண்ணீரை நிறுத்தினீர்.
நான் விழாதபடி பார்த்துக்கொண்டீர்.
கூ நான் உயிருள்ளோரின் தேசத்தில்
தொடர்ந்து கர்த்தருக்குச் சேவைசெய்வேன்.
க0 "நான் அழிந்துபோனேன்!"
என்று கூறியபோதும் நான் தொடர்ந்து நம்பிக்கை வைத்தேன்.
கக நான் பயப்பட்டபோதும்
"மனிதர்கள் எல்லோரும் பொய்யர்களே!" என்றேன்.
கஉ நான் கர்த்தருக்கு எதைக் கொடுக்க முடியும்?
என்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் கர்த்தரே கொடுத்தார்.
கங அவர் என்னைக் காப்பாற்றினார்.
எனவே நான் அவருக்கு ஒரு பானங்களின் காணிக்கையை அளிப்பேன்.
நான் கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிடுவேன்.
கச நான் வாக்குறுதி அளித்தவற்றைக் கர்த்தருக்குக் கொடுப்பேன்.
இப்போது அவரது ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாக நான் போவேன்.
கரு கர்த்தரைப் பின்பற்றுபவர்களில் ஒருவனின் மரணம் கர்த்தருக்கு மிக முக்கியமானது!
கர்த்தாவே, நான் உமது ஊழியர்களில் ஒருவன்!
கசு நான் உமது பணியாள்.
உமது பணிப் பெண் ஒருத்தியின் பிள்ளைகளுள் ஒருவன் நான்.
கர்த்தாவே, நீரே என்னுடைய முதல் போதகர்.
கஎ நான் உமக்கு ஒரு நன்றியறிதலின் காணிக்கையைக் கொடுப்பேன்.
நான் கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிடுவேன்.
கஅ நான் வாக்குறுதி அளித்தவற்றைக் கர்த்தருக்குக் கொடுப்பேன்.
நான் இப்போது அவரது எல்லா ஜனங்களுக்கும் முன்பாகப் போவேன்.
ககூ நான் எருசலேமின் ஆலயத்திற்குப் போவேன்.

கரு நல்லோரின் வீடுகளில் வெற்றியின் கொண்டாட்டத்தை நீங்கள் கேட்கமுடியும்.
கர்த்தர் தமது மிகுந்த வல்லமையை மீண்டும் காட்டினார்.
கசு கர்த்தருடைய கரங்கள் வெற்றியால் உயர்த்தப்பட்டன.
கர்த்தர் தமது மிகுந்த வல்லமையை மீண்டும் காட்டினார்.

கஎ நான் வாழ்வேன், மரிக்கமாட்டேன்.
கர்த்தர் செய்தவற்றை நான் கூறுவேன்.
கஅ கர்த்தர் என்னைத் தண்டித்தார்,
ஆனால் அவர் என்னை மரிக்கவிடமாட்டார்.
ககூ நல்ல வாயிற்கதவுகளே, எனக்காகத் திறவுங்கள்,
நான் உள்ளே வந்து கர்த்தரைத் தொழுதுகொள்வேன்.
உ0 அவை கர்த்தருடைய கதவுகள்,
நல்லோர் மட்டுமே அவற்றின் வழியாகச் செல்ல முடியும்.
உக கர்த்தாவே, என் ஜெபத்திற்குப் பதிலளித்ததற்காக நான் உமக்கு நன்றிக் கூறுவேன்.
நீர் என்னைக் காப்பாற்றியதற்காக நான் உமக்கு நன்றிக் கூறுவேன்.

உஉ கட்டிடம் கட்டுவோர் வேண்டாமெனத் தள்ளிய
கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று.
உங கர்த்தரே இதைச் செய்தார்,
அது அற்புதமானதென நாங்கள் நினைக்கிறோம்.
உச இந்நாள் கர்த்தர் செய்த நாள்.
இன்று நாம் களிப்போடு மகிழ்ச்சியாயிருப்போம்!

உரு ஜனங்கள், "கர்த்தரைத் துதிப்போம்!
கர்த்தர் நம்மைக் காப்பாற்றினார்!
உசு கர்த்தருடைய நாமத்தால் வருகிற மனிதனை வரவேற்றுக்கொள்ளுங்கள்" என்றார்கள்.
ஆசாரியர்கள், "நாங்கள் உங்களைக்
கர்த்தருடைய வீட்டிற்கு வரவேற்கிறோம்!
உஎ கர்த்தரே தேவன், அவர் எங்களை ஏற்றுக்கொள்கிறார்.
பலிக்காக ஆட்டுக்குட்டியைக் கட்டி, பலிபீடத்தின் கொம்புகளுக்கு சுமந்து செல்லுங்கள்" என்றார்கள்.

உஅ கர்த்தாவே, நீரே என் தேவன், நான் உமக்கு நன்றிக் கூறுகிறேன்.
நான் உம்மைத் துதிக்கிறேன்.
உகூ கர்த்தர் நல்லவர், எனவே அவரைத் துதியுங்கள்.
அவரது உண்மை அன்பு என்றென்றைக்கும் நிலைக்கும்.

## கககூ

ஆலெப
க பரிசுத்த வாழ்க்கை வாழும் ஜனங்கள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்.
அந்த ஜனங்கள் கர்த்தருடைய போதனைகளைப் பின்பற்றுகிறார்கள்.

எனவே நான் தவறான போதனைகளை வெறுக்கிறேன்.

நூன்

க0ரு கர்த்தாவே, உமது வார்த்தைகள்
என் பாதைக்கு ஒளி காட்டும் விளக்காகும்.
க0சு உமது சட்டங்கள் நல்லவை.
நான் அவற்றிற்குக் கீழ்ப்படிவேனென உறுதியளிக்கிறேன்.
நான் என் வாக்குறுதியை நிறைவேற்றுவேன்.
க0எ கர்த்தாவே, நான் நீண்ட காலம் துன்பமடைந்தேன்.
தயவுசெய்து நான் மீண்டும் வாழும்படி கட்டளையிடும்.
க0அ கர்த்தாவே, என் துதியை ஏற்றுக்கொள்ளும்.
உமது சட்டங்களை எனக்குப் போதியும்.
க0கூ என் வாழ்க்கை எப்போதும் ஆபத்துள்ளதாயிருக்கிறது.
ஆனால் நான் உமது போதனைகளை மறக்கவில்லை.
கக0 தீயோர் என்னைக் கண்ணியில் சிக்க வைக்கப் பார்க்கிறார்கள்.
ஆனால் நான் உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமலிருந்ததில்லை.
கக க கர்த்தாவே, நான் உமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் பின்பற்றுவேன்.
அது என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது.
ககஉ உமது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதற்கு நான் எப்போதும் கடினமாக முயல்வேன்.

சாமெக்

ககங கர்த்தாவே, உம்மிடம் முற்றிலும் நேர்மையாக இராத ஜனங்களை நான் வெறுக்கிறேன்.
ஆனால் நான் உமது போதனைகளை நேசிக்கிறேன்.
ககச என்னை மூடிமறைத்துப் பாதுகாத்துக்கொள்ளும்.
கர்த்தாவே, நீர் கூறுகிற ஒவ்வொன்றையும் நான் நம்புகிறேன்.
ககரு கர்த்தாவே, தீய ஜனங்கள் என்னருகே வரவிடாதேயும்.
நான் என் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவேன்.
ககசு கர்த்தாவே, நீர் வாக்குறுதியளித்தபடியே என்னைத் தாங்கி உதவும். நானும் வாழ்வேன்.
நான் உம்மை நம்புகிறேன், நான் ஏமாற்றமடையாதபடிச் செய்யும்.
ககஎ கர்த்தாவே, எனக்கு உதவும், நான் காப்பாற்றப்படுவேன்.
நான் உமது கட்டளைகளை என்றென்றைக்கும் கற்பேன்.
ககஅ கர்த்தாவே, உமது சட்டங்களை மீறுகிற ஒவ்வொருவரையும் நீர் தள்ளிவிடுகிறீர்.
ஏனெனில் அந்த ஜனங்கள் உம்மைப் பின்பற்ற சம்மதித்தபோது பொய் கூறினார்கள்.
ககக கர்த்தாவே, நீர் பூமியிலுள்ள தீயோரைக் களிம்பைப்போல் அகற்றிவிடுகிறீர்.
எனவே நான் உமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நேசிப்பேன்.
கஉ0 கர்த்தாவே, நான் உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.
நான் உமது சட்டங்களுக்குப் பயந்து அவற்றை மதிக்கிறேன்.

ஆயின்

நீர் வாக்குறுதி தந்தபடியே என்னை ஞானமுள்ளவனாக்கும்.
களo கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடும்.
நீர் வாக்களித்தபடி என்னைக் காப்பாற்றும்.
களக நான் துதிப் பாடல்களைப் பாடிக்களிப்படைகிறேன்.
ஏனெனில் நீர் உமது சட்டங்களை எனக்குப் போதித்தீர்.
களஉ உமது வார்த்தைகளுக்கு மறு உத்தரவு கொடுக்க எனக்கு உதவும், எனது பாடல்களை நான் பாடட்டும்.
கர்த்தாவே, உமது எல்லா சட்டங்களும் நல்லவை.
களங என்னருகில் வந்து எனக்கு உதவும்.
ஏனெனில் நான் உமது கட்டளைகளைப் பின்பற்றுவதெனத் தீர்மானித்தேன்.
களச கர்த்தாவே, நீர் என்னைக் காப்பாற்றவேண்டுமென விரும்புகிறேன்.
ஆனால் உமது போதனைகள் என்னை மகிழ்விக்கின்றன.
களரு கர்த்தாவே, நான் வாழ்ந்து உம்மைத் துதிக்கட்டும்.
உமது சட்டங்கள் எனக்கு உதவட்டும்.
களசு காணாமறபோன ஆட்டைப்போன்று நான் அலைந்து திரிந்தேன்.
கர்த்தாவே, என்னைத் தேடிவாரும்.
நான் உமது ஊழியன்,
நான் உமது கட்டளைகளை மறக்கவில்லை.

# கஉo

## ஆலயத்திற்குப் போகும்போது பாடும் பாடல்

க நான் தொல்லைகளில் சிக்குண்டிருந்தபோது,
உதவிக்காக கர்த்தரைக் கூப்பிட்டேன், அவர் என்னைக் காப்பாற்றினார்!
உ கர்த்தாவே, என்னைப்பற்றிப் பொய் கூறியவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றும்.
உண்மையில்லாதவற்றை அந்த ஜனங்கள் கூறினார்கள்.

ங பொய்யரே, நீங்கள் பெறப்போவதை அறிவீர்களா?
நீங்கள் அடையப்போவதை அறிவீர்களா?
ச வீரனின் கூரிய அம்புகளும்,
சுடும் தழலும் உன்னைத் தண்டிக்கும்.

ரு பொய்யர்களின் அருகே வாழ்வது மேசேக்கில் வாழ்வதைப் போன்றதும்
கேதாரின் கூடாரங்களண்டையில் வாழ்வதைப் போன்றதுமாகும்.
சு சமாதானத்தை வெறுக்கிற ஜனங்களோடு
நான் நீண்டகாலம் வாழ்ந்திருக்கிறேன்.
எ நான் சமாதானம் வேண்டும் என்றேன்.
ஆனால் அவர்கள் போரை விரும்புகிறார்கள்.

# கஉக

## ஆலயத்திற்குப் போகும்போது பாடும் பாடல்

க நான் மலைகளுக்கு நேராகப் பார்க்கிறேன்.

ஆனால் எனக்கு உதவி உண்மையாகவே எங்கிருந்து வரப்போகிறது?
உ எனக்கு உதவி பரலோகத்தையும் பூமியையும்
படைத்த கர்த்தரிடமிருந்து வரும்.
ந தேவன் உன்னை விழவிடமாட்டார்.
உன்னைப் பாதுகாப்பவர் தூங்கமாட்டார்.
ச இஸ்ரவேலின் பாதுகாவலர் தூங்குவதில்லை.
தேவன் ஒருபோதும் உறங்கார்.
ரு கர்த்தர் உன் பாதுகாவலர்.
அவரது மிகுந்த வல்லமையால் உன்னைப் பாதுகாக்கிறார்.
சு பகல் வேளையில் சூரியன் உன்னைத் துன்புறுத்தாது.
இரவில் சந்திரன் உன்னைத் துன்புறுத்தாது.
எ எல்லா ஆபத்துக்களிலிருந்தும் கர்த்தர் உன்னைக் காப்பாற்றுவார்.
கர்த்தர் உன் ஆத்துமாவைக் காப்பாற்றுவார்.
அ நீ வரும்போதும் போகும்போதும் கர்த்தர் உனக்கு உதவுவார்.
இப்போதும் என்றென்றும் கர்த்தர் உனக்கு உதவுவார்.

# கஉஉ

## ஆலயத்திற்குப் போகும்போது பாடும்படி தாவீது அளித்த பாடல்

க ஜனங்கள், "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம்" என்று கூறியபோது
நான் மிகவும் மகிழ்ந்தேன்.
உ இதோ, நாங்கள் எருசலேமின் வாசல்கள் அருகே நின்றுகொண்டிருக்கிறோம்.
ந இது புதிய எருசலேம்.
ஒரே நகரமாக இது மீண்டும் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.
ச இங்கே இஸ்ரவேலின் கோத்திரங்கள் போவதுண்டு.
கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பதற்கு இஸ்ரவேல் ஜனங்கள் அங்கே செல்வார்கள்.
அவை கர்த்தருக்குரிய கோத்திரங்கள் ஆகும்.
ரு அங்கு அரசர்கள் ஜனங்களை நியாயந்தீர்ப்பதற்குத் தங்கள் சிங்காசனங்களை நிறுவினார்கள்.
தாவீதின் குடும்பத்து அரசர்கள் அங்குத் தங்கள் சிங்காசனங்களை அமைத்தார்கள்.

சு எருசலேமின் சமானத்திற்காக ஜெபம் செய்யுங்கள்.
"உம்மை நேசிக்கும் ஜனங்கள் அங்கு சமாதானத்தைக் காண்பார்கள் என நான் நம்புகிறேன்.
எ உங்கள் வீடுகளின் உள்ளே சமாதானம் நிலவும் என நான் நம்புகிறேன்.
உங்கள் பெரிய கட்டிடங்களில் பாதுகாப்பு இருக்கும் என நான் நம்புகிறேன்."

அ என் சகோதரர்கள், சுற்றத்தினர் ஆகியோரின் நன்மைக்காக,
இங்கு சமாதானம் நிலவவேண்டுமென நான் ஜெபிக்கிறேன்.
கூ நமது தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தின் நன்மைக்காக,

# கஉரு

ஆலயத்திற்குப் போகும்போது பாடும் பாடல்
க கர்த்தருக்குள் நம்பிக்கை வைக்கிறவர்கள் சீயோன் மலையைப் போன்றிருப்பார்கள்.
அவர்கள் அசைக்கப்படுவதில்லை.
அவர்கள் என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்கள்.
உ எருசலேமைச் சுற்றிலும் மலைகள் உள்ளது போல, கர்த்தர் அவரது ஜனங்களைச் சுற்றிலும் இருக்கிறார்.
என்றென்றைக்கும் எப்போதும் அவர் தமது ஜனங்களைக்காப்பார்.
ந நல்ல ஜனங்களின் நாட்டைக் கொடிய ஜனங்கள் நிரந்தரமாக ஆளப்போவதில்லை.
அவ்வாறு நிகழ்ந்தால் நல்லோரும் கூட தீய காரியங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள்.

ச கர்த்தாவே, நல்லோருக்கு நல்லவராக இரும்.
பரிசுத்த இருதயம் உள்ளோரிடம் நல்லவராக இரும்.
ரு கொடிய ஜனங்கள் தவறான காரியங்களைச் செய்கிறார்கள்.
அக்கொடியோரைக் கர்த்தர் தண்டிப்பார்.

இஸ்ரவேலில் சமாதானம் நிலவட்டும்!

# கஉசு

ஆலயத்திற்குப் போகும்போது பாடும் பாடல்
க கர்த்தர் நம்மை மீண்டும் விடுவிக்கும்போது
அது ஒரு கனவைப் போன்றிருக்கும்.
உ நாம் சிரித்துக்கொண்டும் மகிழ்ச்சியுடன் பாடல்களைப்
பாடிக்கொண்டும் இருப்போம்! பிற தேசத்து ஜனங்கள்,
"இஸ்ரவேலின் ஜனங்களுக்குக் கர்த்தர் ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார்!" என்பார்கள்.
ந ஆம், கர்த்தர் அந்த அற்புதமான காரியத்தை நமக்குச் செய்ததால்
நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

ச கர்த்தாவே, பாலைவன நீரூற்றுக்கள் மீண்டும் ஓடிவரும் வெள்ளத்தின்
தண்ணீரால் நிரம்புவதைப்போல எங்களை மீண்டும் விடுவியும்.
ரு ஒருவன் விதைகளை விதைக்கும்போது துக்கமாயிருக்கலாம்.
ஆனால் அவன் பயிர்களின் பலனை அறுவடை செய்யும்போது மகிழ்ச்சியோடிருப்பான்.
சு அவன் விதைகளை வயலுக்கு எடுத்துச் செல்லும்போது அழக்கூடும்,
ஆனால் அறுவடையைக் கொண்டுவரும்போது அவன் மகிழ்ச்சியோடிருப்பான்.

# கஉஎ

ஆலயத்திற்குப் போகும்போது பாடுவதற்கான சாலொமோனின் பாடல்

நீர் என்னை ஒவ்வொரு நாளும் கவனித்தீர். அவற்றில் ஒன்றும் காணாமற்போகவில்லை.
கஎ உமது எண்ணங்கள் எனக்கு
முக்கியமானவை தேவனே,
உமக்கு மிகுதியாகத் தெரியும்.
கஅ நான் அவற்றை எண்ண ஆரம்பித்தால் அவை மணலைக்காட்டிலும் அதிகமாயிருக்கும்.
நான் விழிக்கும்போது இன்னும் உம்மோடுகூட இருக்கிறேன்.

கக தேவனே, கெட்ட ஜனங்களைக் கொல்லும்.
அக்கொலைக்காரரை என்னிடமிருந்து அகற்றிவிடும்.
உo அத்தீயோர் உம்மைக் குறித்துத் தீயவற்றைக் கூறுகிறார்கள்.
அவர்கள் உம் நாமத்தை குறித்துத் தீயவற்றைக் கூறுகிறார்கள்.
உக கர்த்தாவே, உம்மை வெறுப்போரை நான் வெறுக்கிறேன்.
உமக்கெதிராகத் திரும்புவோரை நான் வெறுக்கிறேன்.
உஉ அவர்களை முற்றிலும் நான் வெறுக்கிறேன்.
உம்மைப் பகைப்பவர்கள் எனக்கும் பகைவர்களே.
உங கர்த்தாவே, என்னைப் பார்த்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்.
என்னைச் சோதித்து என் நினைவுகளை அறிந்துகொள்ளும்.
உச என்னிடம் கொடிய எண்ணங்கள் உள்ளனவா எனப்பாரும்.
நித்தியத்திற்குரிய பாதையில் என்னை வழிநடத்தும்.

# கசo

இராகத் தலைவனுக்கு தாவீது அளித்த துதிப் பாடல்

க கர்த்தாவே, என்னைப் பொல்லாதவர்களிடமிருந்து காப்பாற்றும்.
கொடியோரிடமிருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ளும்.
உ அந்த ஜனங்கள் பொல்லாதவற்றைச் செய்யத் திட்டமிடுகிறார்கள்.
அவர்கள் எப்போதும் சண்டையிட ஆரம்பிக்கிறார்கள்.
ங அவர்களது நாவுகள் விஷமுள்ள பாம்புகளைப் போன்றவை.
அவர்களது நாவுகளின் கீழ் பாம்பின் விஷம் இருக்கும்.
ச கர்த்தாவே, கெட்ட ஜனங்களிடமிருந்து என்னைக் காப்பாற்றும்.
கொடியோரிடமிருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ளும்.
அவர்கள் என்னைத் துரத்தி என்னைக் காயப்படுத்த முயல்கிறார்கள்.
ரு அப்பெருமைக்காரர்கள் எனக்காக ஒரு கண்ணியை வைத்தார்கள்.
என்னைப் பிடிக்க அவர்கள் ஒரு வலையை விரித்தார்கள்.
அவர்கள் என் பாதையில் ஒரு கண்ணியை வைத்தார்கள்.

சு கர்த்தாவே, நீரே என் தேவன்.
கர்த்தாவே, நீர் என் ஜெபத்திற்குச் செவிகொடும்.
எ கர்த்தாவே, நீர் என் பெலனான ஆண்டவர்.
நீரே என் மீட்பர்.
போரில் என் தலையைக் காக்கும் கவசத்தைப்போன்று இருக்கிறீர்.
அ கர்த்தாவே, அந்தத் தீய ஜனங்கள் பெற விரும்புகின்றவற்றை பெற அனுமதிக்காதிரும்.

நான் வயல் வெளிகளுக்கு முன்னமே பிறந்தேன். உலகில் முதல் மண் உருவாக்கப்படும் முன்னமே தேவனால் பிறப்பிக்கப்பட்டேன்.
உஎ கர்த்தர் வானத்தைப் படைக்கும்போது ஞானமாகிய நான் அங்கிருந்தேன்.
கர்த்தர் கடலின் எல்லைகளை நிலத்தைச்சுற்றி வட்டங்களாக வரைந்தபோதும் ஞானமாகிய நான் அங்கிருந்தேன்.
உஅ கர்த்தர் வானத்தில் மேகங்களை வைப்பதற்கு முன்னரே நான் பிறப்பிக்கப்பட்டேன்.
கர்த்தர் கடலில் தண்ணீரை ஊற்றும்போதே நான் அங்கிருந்தேன்.
உகூ கடல்களில் தண்ணீரின் அளவைக் கர்த்தர் நிர்ணயித்தபோதே நான் அங்கிருந்தேன்.
தண்ணீரானது கர்த்தருடைய அனுமதியின்றி உயர்ந்திட முடியாது.
கர்த்தர் உலகத்தின் அஸ்திபாரத்தை உண்டாக்கிய போது நான் அங்கிருந்தேன்.
ஙo நான் அவரது அருகில் திறமையுள்ள வேலைக்காரனாக இருந்தேன்.
கர்த்தர் என்னால் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி அடைந்தார்.
நான் அவரை எப்பொழுதும் மகிழ்ச்சியோடு சிரிக்கச் செய்தேன்.
ஙக தான் படைத்த உலகத்தைப் பார்த்து கர்த்தர் மகிழ்ந்தார்.
அவர் அதிலுள்ள ஜனங்களைப் பார்த்து மகிழ்ந்தார்.
ஙஉ “குழந்தைகளே! இப்பொழுது நான் சொல்வதை கவனியுங்கள்.
நீங்களும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.
ஆனால் எனது வழிகளைப் பின்பற்ற வேண்டும்.
ஙங எனது போதனைகளைக் கேட்டு ஞானம் பெறுங்கள்.
அதைக் கவனிக்க மறுக்காதீர்கள்.
ஙச என்னைக் கவனிக்கிற எவனும் மகிழ்ச்சியாக இருப்பான்.
அவன் ஒவ்வொரு நாளும் என் வழிகளைக் கவனிப்பான்.
அவன் என் வழியருகில் காத்திருப்பான்.
ஙரு என்னைக் கண்டுக்கொள்கிறவன் வாழ்வைக் கண்டுக்கொள்கிறான்.
அவன் கர்த்தரிடமிருந்து நல்லவற்றைப் பெறுவான்.
ஙசு ஆனால் எனக்கு எதிராகப் பாவம் செய்கிறவன் தன்னையே புண்படுத்திக்கொள்கிறான்.
என்னை வெறுக்கிற அனைவரும் மரணத்தை விரும்புகிறார்கள்.”

## கூ

க ஞானம் தனது வீட்டைக் கட்டி அதில் ஏழு தூண்களையும்
அமைத்துக்கொண்டாள். உ ஞானம் இறைச்சியைச் சமைத்து,
திராட்சை ரசத்தைத் தயாரித்து அவைகளை மேஜைமீது வைத்தாள்.
ங பிறகு தன் வேலைக்காரர்களை அனுப்பி நகரத்திலிருந்து
ஜனங்களை மலைக்கு வந்து தன்னோடு உணவருந்தும்படி
அழைத்தாள். ச அவள், “வாருங்கள், கற்க அவசியமுள்ளவர்களே
வாருங்கள்” என்று அழைத்தாள். அறிவில்லாதவர்களையும் அவள்
வரவழைத்தாள். ரு “வாருங்கள், ஞானமாகிய உணவை உண்ணுங்கள்.
நான் தயாரித்த திராட்சைரசத்தைப் பருகுங்கள். சு உங்கள் பழைய
முட்டாள்தனமான வழிகளை விட்டுவிடுங்கள். உங்களுக்கு வாழ்க்கை

அ ஒருவன் பிறரை ஏமாற்றி அதிகப் பொருள் சம்பாதிப்பதைவிட நல்ல வழியில் கொஞ்சம் பொருள் சம்பாதிப்பது நல்லது.

கூ ஒருவன் தான் விரும்புகிறபடியெல்லாம் செய்வதற்குத் திட்டமிடலாம். ஆனால் எது நடக்க வேண்டுமென முடிவு செய்பவர் கர்த்தரே.

க௦ அரசன் பேசும்போது, அவனது வார்த்தைகள் சட்டமாகும். அவனது முடிவுகள் எப்பொழுதும் சரியாக இருக்கவேண்டும்.

கக எல்லா அளவுக் கருவிகளும் சரியாக இருக்க வேண்டும் என்றும், அனைத்து வியாபார ஒப்பந்தங்களும் நேர்மையாக இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகின்றார்.

கஉ தீமை செய்பவர்களை அரசர்கள் வெறுக்கின்றனர். நன்மை அவனது அரசாங்கத்தை வலுவுள்ளதாக்கும்.

க௩ அரசர்கள் உண்மையைக் கேட்க விரும்புகின்றனர். ஜனங்கள் பொய் சொல்லாமல் இருப்பதை அரசர்கள் விரும்புகின்றனர்.

கச அரசனுக்குக் கோபம் வந்தால் அவன் ஒருவனைக் கொல்லலாம். அறிவுள்ளவர்கள் அரசனை எப்பொழுதும் மகிழ்ச்சி உடையவர்களாகச் செய்வார்கள்.

கரு அரசன் மகிழ்ச்சியாக இருக்கும்போது, அனைவரின் வாழ்வும் நன்றாக இருக்கும். உன் காரியங்களால் அரசன் மகிழ்ச்சிகொண்டானெனில், அது மேகத்தில் இருந்து வசந்தகால மழை பொழிவதற்கு ஒப்பாகும்.

கசு தங்கத்தைவிட அறிவு மதிப்புமிக்கது. புரிந்துகொள்ளுதல் வெள்ளியைவிட மதிப்புடையது.

கஎ நல்லவர்கள் தம் வாழ்வைத் தீமையில் இருந்து விலக்கி வைப்பார்கள். தன் வாழ்வில் கவனமாக இருக்கிற ஒருவன், தன் ஆத்துமாவைக் காப்பாற்றிக்கொள்கிறான்.

கஅ ஒருவன் கர்வம் கொண்டவனாக இருந்தால் அவன் அழிவின் ஆபத்தில் இருக்கிறான். மற்றவர்களைவிடத் தான் சிறந்தவன் என்று நினைப்பவன் தோல்வியின் ஆபத்தில் இருக்கிறான்.

ககூ மற்றவர்களைவிடத் தம்மைச் சிறந்தவர்களாக நினைப்பவர்களோடு செல்வத்தைப் பங்கிட்டு வாழ்வதைவிட பணிவாகவும், ஏழை ஜனங்களோடும் சேர்ந்து வாழ்வது சிறந்ததாகும்.

உ௦ ஜனங்களின் போதனைகளைக் கவனமாகக் கேட்பவன் பயன் அடைவான். கர்த்தர் மேல் நம்பிக்கை வைப்பவன் ஆசீர்வதிக்கப்படுகிறான்.

உக ஒருவன் அறிவுள்ளவனாக இருப்பதை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். வார்த்தைகளைத் தேர்ந் தெடுத்து கவனமாகப் பேசுபவன் நிரூபிக்கும் ஆற்றல் உடையவனாக இருக்கமுடியும்.

உஉ அறிவானது ஜனங்களுக்கு உண்மையான வாழ்க்கையைத் தரும். ஆனால் அறிவற்றவர்களோ மேலும் முட்டாள் ஆவதையே விரும்புவார்கள்.

உ௩ அறிவுள்ளவர்கள் எப்பொழுதும் பேசுவதற்கு முன்பு சிந்திப்பார்கள். அவர்கள் சொல்லும் வார்த்தைகள் நல்லவையாகவும் உயர்வானவையாகவும் இருக்கும்.

கக அவரது தலை சுத்தமான தங்கத்தைப்போன்றிருக்கும்.
அவரது தலைமுடி சுருளுடையதாயிருக்கும்.
அது காகத்தைப்போன்று கறுப்பாயிருக்கும்.
கஉ அவரது கண்கள் நீரோடைகளின் அருகிலுள்ள புறாவின் கண்களைப் போலிருக்கும்.
பால் நிரம்பிய குளத்திலுள்ள புறாக்களைப் போலவும்,
பதிக்கப்பட்ட நகைபோலவும் இருக்கும்.
கங அவரது கன்னங்கள் மணம்மிகுந்த வாசனைப் பூக்கள் நிறைந்த தோட்டம் போலிருக்கும்.
அவரது உதடுகள் லீலி மலர்களைப்போல் இருக்கும்.
அதிலிருந்து வெள்ளைப்போளம் வடியும்.
கச அவரது கைகள் படிகப்பச்சை நகைகளால் அலங்கரிக்கப்பட்டது போலிருக்கும்.
அவரது உடல் மென்மையான தந்தம்.
இந்திர நீல இரத்தினங்கள் இழைத்ததுபோன்று இருக்கும்.
கரு அவரது கால்கள் பளிங்குத் தூண்கள்
பொன் பீடத்தில் இருப்பதுபோல் இருக்கும்.
அவர் நின்றால்
லீபனோனில் நிற்கும் கேதுருமரம் போல் இருக்கும்.
கசு ஆம், எருசலேமின் பெண்களே!
என் நேசர் மிகவும் விரும்பத்தக்கவர்.
அவரது வாய் இனிமையுள்ள அனைத்திலும் இனிமையானது.
இப்படிப்பட்டவரே என் நேசர்
இத்தகையவரே என் நேசர்.

## சு

### எருசலேம் பெண்கள் அவளிடம் பேசுகிறார்கள்

க அழகான பெண்ணே
உன் நேசர் எங்கே போனார்?
உன் நேசர் எந்த வழியாகப் போனார்?
எங்களிடம் சொல். அவரைத் தேட உனக்கு உதவி செய்வோம்.

### அவள் எருசலேம் பெண்களுக்கு பதிலளிக்கிறாள்

உ என் நேசர் கந்தவர்க்கப் பூக்களுக்காக தோட்டத்தில் மேய
லீலி மலர்களைக் கொய்ய தன் தோட்டத்திற்குப் போனார்.
ங நான் அவருக்குரியவள். அவர் எனக்குரியவர்.
அவர் லீலிகளை மேய்பவர்.

### அவன் அவளிடம் பேசுகிறான்

ச என் அன்பே நீ திர்சாவைப்போன்று அழகானவள்.
எருசலேமைப்போன்று இனிமையானவள்.
நீ கம்பீரமான நகரங்களைப் போன்றவள்.
ரு என்னைப் பாராதே உன் கண்கள் என்னை வென்றுவிட்டன.
உன் கூந்தல் கீலேயாத் மலைச் சரிவில் நடனமாடும்
வெள்ளாட்டு மந்தையைப் போல் அசைந்துகொண்டிருக்கிறது.

எனவே, அத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு வேறுபட்டச் செய்தியைக் கூறுகிறார்கள்.
அவர்கள், 'உங்களுக்கு சமாதானம் இருக்கும்' என்று கூறுகிறார்கள்.
சில ஜனங்கள் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார்கள்.
அவர்கள் தாங்கள் செய்யவிரும்புவதை மட்டுமே செய்கிறார்கள்.
எனவே அத்தீர்க்கதரிசிகள், 'உங்களுக்கு எந்தத் தீமையும் ஏற்படாது!' என்று கூறுகிறார்கள்.
கஅ ஆனால் அத்தீர்க்கதரிசிகளில் எவரும் பரலோகச் சபையில் நின்றிருக்கமாட்டார்கள்.
அவர்களில் எவரும் கர்த்தருடைய செய்தியைப் பார்த்திருக்கவோ கேட்டிருக்கவோமாட்டார்கள்.
அவர்கள் எவரும் கர்த்தருடைய செய்தியை கூர்ந்து கவனமாகக் கேட்டிருக்கமாட்டார்கள்.
க௯ இப்பொழுது கர்த்தருடைய தண்டனை புயலைப் போன்று வரும்.
கர்த்தருடைய கோபம் கொடிய புயலைப்போன்றிருக்கும்.
கெட்ட மனிதர்களின் தலைகளை மோதித் தள்ளவரும்.
உ௦ கர்த்தருடைய கோபம், அவர் என்ன செய்ய வேண்டும் என்று
திட்டமிட்டிருந்தாரோ அவற்றைச் செய்து முடிக்கும்வரை நிற்காது.
அந்த நாட்களின் முடிவில்
நீங்கள் தெளிவாக அறிந்துக்கொள்வீர்கள்.
உக அத்தீர்க்கதரிசிகளை நான் அனுப்பவில்லை.
ஆனால், அவர்கள் செய்தியைச் சொல்ல ஓடினார்கள்.
நான் அவர்களோடு பேசவில்லை.
ஆனால் அவர்கள் என் நாமத்தில் பிரசங்கம் செய்தனர்.
உஉ அவர்கள் எனது பரலோகச்சபையில் நின்றிருந்தால்,
பிறகு யூதாவின் ஜனங்களுக்கு என் செய்தியைச் சொல்லியிருப்பார்கள்.
அவர்கள் தீயசெயல் செய்யாமல் ஜனங்களைத் தடுத்திருப்பார்கள்.
அவர்கள் பாவம் செய்யாதபடி ஜனங்களைத் தடுத்திருப்பார்கள்."

உ௩ "நான் தேவன்! நான் எப்பொழுதும் அருகில் இருக்கிறேன்!"
இந்த வார்த்தை கர்த்தரிடத்திலிருந்து வருகிறது.
"நான் தூரத்தில் இல்லை.
உச சில மறைவிடங்களில் ஒருவன் என்னிடமிருந்து ஒளிய முயலலாம்.
ஆனால், அவனைப் பார்ப்பது எனக்கு எளிதாகும்.
ஏனென்றால், நான் பரலோகம் பூமி என்று எல்லா இடங்களிலும் இருக்கிறேன்!"
கர்த்தர் இவற்றைச் சொன்னார்.

உரு "என் நாமத்தில் பொய்யைப் பிரசங்கம் செய்யும் தீர்க்கதரிசிகள்
இருக்கிறார்கள். அவர்கள், 'எனக்கு ஒரு கனவு வந்தது.
எனக்கு ஒரு கனவு வந்தது' என்றார்கள். அவர்கள் இவற்றைச்
சொல்வதை நான் கேட்டேன்.
உ௬ இது இன்னும் எவ்வளவு காலம்
செல்லும்? அத்தீர்க்கதரிசிகள் பொய்களை நினைக்கின்றனர்.
பிறகு அப்பொய்களை ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள்.
உ௭ இத்தீர்க்கதரிசிகள் ஜனங்கள் என் நாமத்தை மறக்கச் செய்ய

அவை இப்பொழுது பாபிலோனுக்கு ஏற்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.”

சீயோனில் வாழ்கின்ற ஜனங்கள் அவற்றைச் சொல்வார்கள்:
“பாபிலோனிய ஜனங்கள் எங்கள் ஜனங்களைக் கொன்ற குற்றம் உள்ளவர்கள்.
இப்பொழுது அவர்கள் தாம் செய்த தவறுக்குத் தண்டிக்கப்படுகிறார்கள்”
எருசலேம் நகரம் அவற்றைச் சொல்லும்.
ங௬ எனவே கர்த்தர் கூறுகிறார்,
“யூதா உன்னை நான் பாதுகாப்பேன்.
பாபிலோன் தண்டிக்கப்படும் என்பதை நான் உறுதி செய்வேன்.
பாபிலோன் கடலை நான் வற்றச் செய்வேன்.
நான் அவளது நீரூற்றுக்களை வற்றச் செய்வேன்.
ங௭ பாபிலோன் அழிந்த கட்டிடங்களின் குவியலாக ஆகும்.
பாபிலோன் காட்டு நாய்கள் வாழத்தக்க இடமாகும்.
ஜனங்கள் கற்குவியலைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.
அவர்கள் பாபிலோனைப் பற்றி நினைக்கும்போது தங்கள் தலைகளை அசைப்பார்கள்.
ஜனங்கள் எவரும் வாழாத இடமாக பாபிலோன் ஆகும்.

ங௮ “பாபிலோன் ஜனங்கள் கெர்ச்சிக்கிற இளம் சிங்கங்களைப் போன்றவர்கள்.
அவர்களது சத்தம் சிங்கக் குட்டிகளைப் போன்றிருக்கும்.
ங௯ அந்த ஜனங்கள் வல்லமை மிக்க சிங்கங்களைப் போன்று நடித்துக்கொண்டிருக்கிறார்கள்.
நான் அவர்களுக்கு ஒரு விருந்துக் கொடுப்பேன்.
நான் அவர்களைக் குடிபோதையேறினவர்களாக்குவேன்.
அவர்கள் சிரிப்பார்கள். நல்ல நேரத்தைப் பெறுவார்கள்.
பிறகு அவர்கள் என்றென்றும் தூங்குவார்கள்.
அவர்கள் என்றும் விழிக்கமாட்டார்கள்”
என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சo “பாபிலோன் கொல்லப்படுவதற்காகக் காத்திருக்கும்.
ஆட்டுக்குட்டிகள், ஆட்டுக் கடாக்கள், வெள்ளாடுகள் போன்றிருக்கும்.
நான் அவற்றை வெட்டுவதற்குக் கொண்டு செல்வேன்.

சக “சேசாக்கு” தோற்கடிக்கப்படும்.
பூமியிலே சிறந்ததும் கர்வமுமுள்ள நாடு எவ்வாறு சிறைப் பிடிக்கப்படும்?
மற்ற தேசங்களில் உள்ள ஜனங்கள்
பாபிலோன் பாழாய்ப்போவதை கவனித்துப் பார்ப்பார்கள்.
அவர்கள் பார்க்கின்றவை அவர்களைப் பயப்படுத்தும்.
சஉ பாபிலோன் மீது கடல் எழும்பும்.
அதன் இரைச்சலான அலைகள் அவளை மூடும்.
சங பாபிலோன் நகரங்கள் அழிக்கப்பட்டு காலியாகும்.

பரிசுத்தமான இடங்களுக்குள் போயிருக்கிறார்கள்.”

ருஉ கர்த்தர் கூறுகிறார்: “நேரம் வந்துக்கொண்டிருக்கிறது,
நான் பாபிலோனின் விக்கிரகங்களைத் தண்டிப்பேன்.
அப்போது, புண்பட்ட ஜனங்கள் வலியுடன்
நாட்டின் எல்லா இடங்களிலும் அழுவார்கள்.
ருங பாபிலோன் வானத்தைத் தொடுகின்றவரை வளரலாம்.
பாபிலோன் தனது கோட்டைகளைப் பலப்படுத்தலாம்.
ஆனால் அந்நகரத்தை எதிர்த்து போரிடுமாறு நான் ஜனங்களை அனுப்புவேன்.
அந்த ஜனங்கள் அவளை அழிப்பார்கள்”
கர்த்தர் இவற்றைக் கூறினார்.

ருச “பாபிலோனில் ஜனங்கள் அழுதுக்கொண்டிருப்பதை நாங்கள் கேட்கமுடியும்.
பாபிலோன் தேசத்தில் ஜனங்கள் பொருட்களை அழித்துக் கொண்டிருக்கும் ஓசையைக் கேட்கமுடியும்.
ருரு விரைவில் கர்த்தர் பாபிலோனை அழிப்பார்.
அந்த நகரில் உள்ள உரத்த ஓசைகளை அவர் நிறுத்துவார்.
பகைவர்கள் இரைகின்ற அலைகளைப்போன்று வருவார்கள்.
சுற்றிலும் உள்ள ஜனங்கள் அந்த இரைச்சலைக் கேட்பார்கள்.
ருசூ படை வந்து பாபிலோனை அழிக்கும்.
பாபிலோனின் வீரர்கள் கைப்பற்றப்படுவார்கள்.
அவர்களின் அம்புகள் உடைக்கப்படும்.
ஏனென்றால், கர்த்தர் ஜனங்கள் செய்த தீயசெயல்களுக்கு தண்டனையைக் கொடுக்கிறார்.
கர்த்தர் அவர்களுக்கேற்ற முழு தண்டனையையும் கொடுக்கிறார்.
ருஎ நான் பாபிலோனின் ஞானிகளையும்
முக்கியமான அதிகாரிகளையும் குடிமயக்கத்துக்குள்ளாக்குவேன்.
நான் ஆளுநர்களையும் அதிகாரிகளையும்
வீரர்களையும்கூடக் குடிக்கச்செய்வேன்.
பிறகு அவர்கள் என்றென்றைக்கும் உறங்குவார்கள்.
அவர்கள் எப்பொழுதும் எழமாட்டார்கள்”
அரசர் இவற்றைச் சொன்னார்.
அவரது நாமம் சர்வ வல்லமையுள்ள கர்த்தர்.

ருஅ சர்வ வல்லமையுள்ள கர்த்தர் கூறுகிறார்,
“பாபிலோனின் அகலமான வலிமையான சுவர் கீழேத்தள்ளப்படும்.
அவளது உயர்ந்த வாசல்கள் எரிக்கப்படும்.
பாபிலோன் ஜனங்கள் கடினமான வேலை செய்வார்கள்.
ஆனால் அது உதவாது.
அவர்கள் நகரைக் காப்பாற்ற முயல்வதில்
சோர்ந்து போவார்கள்.
ஆனால் அவர்கள் எரியும் நெருப்புக்கு எண்ணெய் போன்று ஆவார்கள்.”

போருக்குத் தயாராக இரு.
யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்.
உ ஆம், கர்த்தர் யாக்கோபின் மகிமையை மாற்றினார்.
இது இஸ்ரவேலரின் மகிமை போன்றிருக்கும்.
பகைவன் அவற்றை அழித்தான்.
அவர்களின் திராட்சைக் கொடிகளை அழித்தான்.

ந அவ்வீரர்களின் கேடயங்கள் சிவந்திருக்கிறது.
அவர்களின் சீருடைகள் பிரகாசமான சிவப்பாக உள்ளது.
அவர்களின் இரதங்கள் போருக்கு வரிசையாக உள்ளன,
நெருப்பின் ஜூவாலையைப் போன்று மின்னுகின்றன.
அவர்களின் குதிரைகள் போவதற்கு தயாராக உள்ளன.
ச அவர்களின் இரதங்கள் தெருக்களில் போட்டியிட்டு ஓடுகின்றன.
தெருக்களின் இடது சாரியாகவும் வலதுசாரியாகவும் ஓடுகின்றன.
அவை எரியும் பந்தங்களைப் போன்றும்,
அங்குமிங்கும் மின்னும் மின்னலைப் போலவும் காணப்படுகின்றன.

ரு விரோதி தனது சிறந்த வீரர்களை அழைக்கிறான்.
ஆனால் அவர்கள் மதிற்சுவரை நோக்கி ஓடி,
அங்குள்ள சுவர்களைத் தகர்க்கும் கருவியின்மேல்
அவர்களின் கேடயத்தை நிறுவுகிறார்கள்.
சு ஆனால் ஆற்றின் மதகுகள் திறக்கப்படுகின்றன.
எதிரிகள் அவ்வழியாக வந்து அரசனின் வீட்டை அழிக்கிறார்கள்.
எ பகைவர்கள் ராணியைப் பிடித்துச் செல்வார்கள்.
அவளது அடிமைப்பெண்கள் புறாக்களைப் போன்று துக்கத்துடன் அழுவார்கள்.
அவர்கள் தம் மார்பில் அடித்துக்கொண்டு தமது துக்கத்தைக் காட்டுவார்கள்.

அ நினிவே, தண்ணீர் வற்றிப்போன
குளத்தைப்போன்று இருக்கிறது.
ஜனங்கள், "நிறுத்துங்கள்! ஓடுவதை நிறுத்துங்கள்!" என்று சொன்னார்கள்.
ஆனால் அது பயன் தரவில்லை.

கூ நினிவேயை அழிக்கப்போகும் வீரர்களாகிய நீங்கள், வெள்ளியை எடுங்கள்!
தங்கத்தை எடுங்கள்!
அங்கே எடுப்பதற்கு ஏராளமாக உள்ளன.
அங்கே ஏராளமான கருவூலங்கள் உள்ளன.
கo இப்பொழுது, நினிவே காலியாக இருக்கிறது.
எல்லாம் திருடப்பட்டன.
நகரம் அழிக்கப்பட்டது.
ஜனங்கள் தங்கள் தைரியத்தை இழந்தனர்.
அவர்களது இதயங்கள் அச்சத்தால் உருகின.

தேசம் முழுவதும் பரவியது. நோயுற்ற மக்கள் அனைவரையும்
இயேசுவிடம் அழைத்து வந்தனர். நோயுற்ற அம்மக்கள் பலவிதமான
வியாதிகளாலும் வலியினாலும் அவதியுற்றனர். சிலர் மிகுந்த
வலியினாலும், சிலர் பிசாசு பிடித்தும், சிலர் வலிப்புநோயினாலும்,
சிலர் பாரிச வியாதியாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். இயேசு அவர்கள்
அனைவரையும் குணமாக்கினார். உரு பற்பல மக்கள் இயேசுவைப்
பின் தொடர்ந்தார்கள். அம்மக்கள் கலிலேயா, பத்துநகரங்கள்,
எருசலேம், யூதேயா மற்றும் யோர்தான் நதியின் அக்கரை முதலான
பகுதிகளிலிருந்து வந்திருந்தனர்.

# ரு

## இயேசுவின் மலைப் பிரசங்கம்
*(லூா. 6:20-23)*

க அங்குக் கூட்டமாயிருந்த மக்களைப் பார்த்த இயேசு ஒரு
குன்றின்மீது சென்று அமர்ந்தார். அவரது சீஷர்கள் அவரிடம்
வந்தார்கள். உ இயேசு மக்களுக்குக் கீழ்க்கண்டவாறு போதனை
செய்தார்:

ந "ஆவியில் எளிமை கொண்ட மனிதர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்,
பரலோக இராஜ்யம் அவர்களுக்குரியது.
ச இம்மையில் துக்கம் அடைந்த மனிதர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
தேவன் அவர்களைத் தேற்றுவார்.
ரு பணிவுடையவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
தேவன் வாக்களித்த இடத்தை* அவர்கள் பெறுவார்கள்.
சு மற்ற எதைக் காட்டிலும் நீதியான செயல்களைச் செய்ய
விரும்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
அவர்களுக்கு முழுத்திருப்தியைத் தேவன் அளிப்பார்.
எ மற்றவர்களுக்குக் கருணை காட்டுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
அவர்களுக்குக் கருணை காட்டப்படும்.
அ தூய்மையான எண்ணமுடையவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
அவர்கள் தேவனின் அருகாமையிலிருப்பார்கள்.
கூ அமைதிக்காகச் செயலாற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
தேவன் அவர்களைத் தன் குமாரர்கள் என அழைப்பார்.
கo நன்மை செய்வதற்காகத் தண்டிக்கப்படுகிறவர்கள்
ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
பரலோக இராஜ்யம் அவர்களுக்குரியது.

கக "உங்களுக்கெதிராகத் தீய சொற்களைப் பேசி மக்கள் உங்களைத்
துன்புறுத்துவார்கள். நீங்கள் என்னைப் பின்பற்றுவதினிமித்தம்
எல்லாவிதமான தீய சொற்களையும் உங்களுக்கெதிராகச்
சொல்வார்கள். ஆனால் மக்கள் உங்களுக்கு அவற்றைச்
செய்யும்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். கஉ அதற்காக
மகிழ்ச்சியடையுங்கள். தேவனுடைய மகத்தான வெகுமதி
உங்களுக்குக் காத்திருக்கிறது. உங்களுக்கு முன்பு வாழ்ந்த

* **ரு:ரு**: 'தேவன் வாக்களித்த இடம்' சங்கீதம் 37:11.

தங்களைக் குறித்து வெட்கமடைந்தார்கள். இயேசு செய்த அற்புதமான
காரியங்களைக் குறித்து எல்லா மக்களும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

### கடுகு விதையின் உவமை
*(மத். 13:31-33; மாற். 4:30-32)*

கஅ பின்பு இயேசு, "தேவனுடைய இராஜ்யம் எதைப் போன்றது?
அதை எதனோடு ஒப்பிடுவேன்? கக தேவனுடைய இராஜ்யம் கடுகுச்
செடியின் விதையைப் போன்றது. ஒருவன் இந்த விதையை
அவனது தோட்டத்தில் ஊன்றுகிறான். விதை முளைத்து மரமாகிறது.
பறவைகள் அதன் கிளைகளில் கூடுகளைக் கட்டுகின்றன" என்றார்.
உo மீண்டும் இயேசு, "தேவனின் இராஜ்யத்தை எதனோடு
ஒப்பிடுவேன்? உக ஒரு பெரிய பாத்திரத்தில் அப்பத்திற்காக
வைக்கப்படிருக்கும் மூன்று மடங்கு அளவுள்ள மாவோடு ஒரு பெண்
கலக்கும் புளிப்பான பொருளுக்கு ஒப்பானதாக இருக்கிறது. அது
மாவு முழுவதையும் புளிக்கச் செய்யும்" என்றார்.

### குறுகிய வாசல்
*(மத். 7:13-14, 21-23)*

உஉ ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் இயேசு
போதித்துக்கொண்டிருந்தார். அவர் எருசலேம் வழியாகப் பயணம்
செய்துகொண்டிருந்தார். உங ஒருவன் இயேசுவிடம், "ஆண்டவரே,
சிலர் மட்டுமே மீட்கப்படுவார்களா?" என்று கேட்டான்.
உச இயேசு, "பரலோகத்திற்கு நேராகத் திறக்கிற குறுகிய வாசலின்
வழியாக நுழைய முயலுங்கள். பலர் அதனுள் நுழைய முயல்வார்கள்.
ஆனால் அவர்களால் நுழைய இயலாது. உரு ஒரு மனிதன் தன் வீட்டின்
கதவை மூடிக்கொண்டால் நீங்கள் வெளியே நின்று தட்டமுடியும்.
ஆனால் அவன் திறக்கமாட்டான். நீங்கள், 'ஐயா, எங்களுக்காகக்
கதவைத் திறக்கவும்' என்று கேட்க முடியும். அம்மனிதன், 'நீங்கள்
எங்கிருந்து வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது' என்பான்.
உசா பிறகு நீங்கள் அவனிடம் 'நாங்கள் உங்களோடு உண்டு,
குடித்தோமே. நீங்கள் எங்களது நகரங்களில் போதித்தீர்களே' என்று
சொல்லுவீர்கள். உஎ அப்போது அவன், 'உங்களை நான் அறியேன்.
எங்கிருந்து வருகிறீர்கள். என்னிடமிருந்து போய்விடுங்கள். நீங்கள்
பிழைகளைச் செய்கிற மனிதர்கள்' என்பான்.
உஅ "நீங்கள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்றும்
தீர்க்கதரிசிகளையும் தேவனின் இராஜ்யத்தில் காண்பீர்கள். ஆனால்
நீங்களோ வெளியே விடப்படுவீர்கள். பயத்தாலும் கோபத்தாலும்
உரக்கச் சத்தமிடுவீர்கள். உகூ கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய
திசைகளில் இருந்து மக்கள் வருவார்கள். தேவனுடைய இராஜ்யத்தில்
மேசையருகே அவர்கள் அமர்வார்கள். நo வாழ்க்கையில் மிகவும்
தாழ்ந்த இடத்தில் இருந்த மக்களுக்கு தேவனுடைய இராஜ்யத்தில்
மிகவும் உயர்ந்த இடம் கொடுக்கப்படும். இப்போது உயர்ந்த இடத்தில்
இருக்கும் மக்கள் தேவனுடைய இராஜ்யத்தில் தாழ்ந்த இடத்தில்
இருப்பார்கள்" என்று கூறினார்.

### எருசலேமில் இயேசு மரிப்பார்
*(மத். 23:37-39)*

அ அவரது சீஷர்கள், “ஆண்டவரே, யூதேயாவில் உள்ள யூதர்கள் உம்மைக் கல்லெறிந்து கொல்ல முயற்சித்தார்கள். அது நடந்தது சமீபகாலத்தில்தான். எனவே, இப்பொழுது அங்கே திரும்பிப் போக வேண்டுமா?” என்று கேட்டனர்.
கூ இயேசுவோ, “பகலில் பன்னிரண்டு மணிநேரம் வெளிச்சம் இருக்கும். சரிதானே. ஒருவன் பகலில் நடந்தால், அவன் தடுமாறி விழமாட்டான். ஏனென்றால், அவனால் உலகின் வெளிச்சத்தைப் பார்க்க முடியும்.
கo ஆனால் ஒருவன் இரவிலே நடந்தால் அவன் தடுமாறுவான். ஏனென்றால் அவனுக்கு உதவி செய்ய வெளிச்சம் இல்லை” என்றார்.
கக அவர் மேலும், “நமது நண்பன் லாசரு இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கிறான். ஆனால் நான் அவனை எழுப்பப்போகிறேன்” என்றார்.
கஉ அவரது சீஷர்களோ, “ஆண்டவரே, அவன் தூங்கிக்கொண்டிருந்தால் நிச்சயம் குணமாவான்” என்றார்கள்.
கந லாசரு இறந்து போனான் என்பதைக்குறித்தே இயேசு அவ்வாறு சொன்னார். ஆனால் அவரது சீஷர்களோ லாசரு உண்மையில் தூங்குவதாக நினைத்துக்கொண்டனர்.
கச பிறகு இயேசு தெளிவாக, “லாசரு இறந்துபோனான்.
கரு அங்கே அப்பொழுது நான் இல்லை என்பதால் நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது என்னை நீங்கள் நம்புவீர்கள். அதனால்தான் மகிழ்கிறேன். நாம் அவனிடம் போவோம்” என்றார்.
கசு பிறகு தோமா என்று அழைக்கப்படும் சீஷன், ஏனைய சீஷர்களைப் பார்த்து, “நாமும் அவரோடு போவோம். யூதேயாவில் இயேசுவோடு நாமும் சாவோம்” என்றான்.

## பெத்தானியாவில் இயேசு

கஎ இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். அங்கு வந்ததும் லாசரு இறந்துபோனாதாகவும் அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்கள் ஆனதாகவும் அறிந்தார்.
கஅ எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் பெத்தானியா உள்ளது.
ககூ யூதர்கள் பலர் மார்த்தாளிடமும் மரியாளிடமும் வந்திருந்தனர். அவர்களின் சகோதரன் லாசருவின் மரணம் குறித்து துக்கம் விசாரிக்க வந்தனர்.
உo இயேசு வந்துகொண்டிருப்பதாக மார்த்தாள் கேள்விப்பட்டாள். அவரை வரவேற்க அவள் போனாள். ஆனால் மரியாள் வீட்டிலேயே தங்கிக்கொண்டாள்.
உக மார்த்தாள் இயேசுவிடம், “ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்.
உஉ ஆனால் இப்பொழுதுகூட நீர் கேட்பவற்றை தேவன் உமக்குத் தருவார்” என்றாள்.
உந இயேசுவோ, “உன் சகோதரன் எழுவான், மீண்டும் உயிர்வாழ்வான்” என்றார்.
உச மார்த்தாளோ, “உயிர்த்தெழுதல் நடைபெறும் கடைசிநாளில் அவன் மீண்டும் எழுந்து உயிர் வாழ்வான் என்று எனக்குத் தெரியும்” என்றாள்.
உரு இயேசு அவளிடம், “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னில் நம்பிக்கை வைக்கிற எவனும் தான் இறந்த

அவர்களை நியாயம்தீர்க்கும். சகூ ஏனென்றால் நான் சொன்ன
உபதேசங்கள் என்னிடமிருந்து வந்தவையல்ல. நான் சொன்னவையும்
உபதேசித்தவையும் என்னை அனுப்பிய என் பிதாவாகிய தேவன்
எனக்குச் சொன்னவையாகும். ரு௦ என் பிதாவின் கட்டளைகள்
நித்திய ஜீவனுக்குரியவை என்பதை அறிவேன். ஆகையால்
நான் சொல்கிறவைகளை என் பிதா எனக்குச் சொன்னபடியே
சொல்கிறேன்" என்றார்.

# கங

*சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல்*

க இது ஏறக்குறைய பஸ்கா பண்டிகைக்கான நேரம். இதுதான்
இந்த உலகத்தை விட்டுச் செல்வதற்கான நேரம் என்பதை இயேசு
அறிந்திருந்தார். இயேசு, தன் பிதாவிடம் திரும்பிப் போவதற்கான
காலம் இது. இயேசு அவருடைய மக்களின் மீது பெரிதான அன்பை
எப்போதும் வைத்திருந்தார். இப்பொழுது, அவருக்கு அவர்களிடம்
கொண்ட அன்பை வெளிப்படுத்தும் நேரமாயிற்று.

உ இயேசுவும் அவர் சீஷர்களும் மாலை உணவுக்காக அமர்ந்தனர்.
ஏற்கெனவே சாத்தான் யூதாஸ்காரியோத்தின் மனதில் புகுந்து
அவனை இயேசுவுக்கு எதிராக ஆக்கியிருந்தான். (யூதாஸ்
சீமோனின் மகன்) ங இயேசுவுக்கு அவரது பிதா எல்லாவிதமான
அதிகாரத்தையும் கொடுத்திருந்தார். இயேசு இதனை அறிந்திருந்தார்.
தேவனிடமிருந்து தான் வந்ததாக இயேசு தெரிந்துவைத்திருந்தார்.
அதோடு அவர் தன் பிதாவிடமே திரும்பிப் போகவேண்டும் என்பதனை
அறிந்திருந்தார். ச அவர்கள் உணவு உண்டுகொண்டிருக்கும்போது,
இயேசு எழுந்து ஆடைகளைக் கழற்றி வைத்தார். ஒரு துண்டை
எடுத்துத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டார். ரு பிறகு இயேசு ஒரு
பாத்திரத்தில் நீரை ஊற்றினார். அவர் தம் சீஷர்களின் கால்களைக்
கழுவிச் சுத்தப்படுத்த ஆரம்பித்தார். பின் தன் இடுப்புத் துண்டால்
அவர்கள் கால்களைத் துடைத்தார்.

சு இயேசு, சீமோன் பேதுருவிடம் வந்தார். ஆனால் பேதுருவோ
இயேசுவிடம், "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவக்கூடாது"
என்றான்.

எ அதற்கு இயேசு அவனிடம், "நான் என்ன செய்கிறேன் என்று
இப்போது உனக்குத் தெரியாது. ஆனால் பிறகு நீ புரிந்துகொள்வாய்"
என்றார்.

அ பேதுருவோ, "இல்லை நீர் என் கால்களைக் கழுவவேகூடாது"
என்றான்.

இயேசுவோ, "நான் உன் கால்களைக் கழுவாவிட்டால், நீ என்னோடு
பங்குள்ளவனாக இருக்க முடியாது" என்றார்.

கூ உடனே பேதுரு, "ஆண்டவரே, அப்படியானால் என் கால்களோடு,
என் கைகளையும் தலையையும்கூடக் கழுவுங்கள்" என்றான்.

க௦ "ஒரு மனிதன் குளித்தபிறகு அவனது சரீரம் எல்லாம்
சுத்தமாகிவிடுகிறது. அதன் பிறகு அவன் கால்களை மட்டும்
கழுவினால் போதும். நீங்கள் சுத்தமாக இருக்கிறீர்கள். ஆனால்
அனைவரும் அல்ல" என்றார் இயேசு. கக யார் தனக்கு எதிராக

மரியாதையைத் தாருங்கள். ச நீங்கள் உங்கள் வாழ்வில் மட்டும்
அல்லாமல் மற்றவர் வாழ்விலும் ஆர்வம் கொள்ளுங்கள்.

### தன்னலமற்ற குணம்

ரு உங்கள் வாழ்வில் நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் போன்று
சிந்திக்கவும், செயல்படவும் வேண்டும்.

சு கிறிஸ்து அவரளவில் எல்லாவற்றிலும் தேவனைப் போன்றிருந்தார்.
அவர் தேவனுக்கு நிகரானவராயிருந்தார். ஆனால் தேவனுக்குச் சமமாக இருப்பதை கொள்ளையில் கிடைத்த அரிய பொருளாக அவர் நினைத்ததில்லை.
எ தேவனோடு இருந்த தனது இடத்தை அவர் விட்டுக்கொடுத்து, தேவனது ஊழியர் வடிவை எடுத்தார்.
மனிதராகப் பிறந்து அடிமையைப் போல அவர் வாழ்ந்தார்.
அ மனிதனாக அவர் வாழும்போது தேவனுக்கு முன்பு கீழ்ப்படிந்தவராக இருந்தார்.
மரணம் வரைக்கும் அவர் பணிவுள்ளவராக இருந்தார்.
முடிவில் சிலுவையிலே இறந்தார்.
கூ தேவனுக்குக் கிறிஸ்து பணிந்தார்.
ஆகையால் தேவன் அவரை மிக முக்கியமான இடத்துக்கு உயர்த்திவிட்டார்.
தேவன் அவரது பெயரை மற்ற எல்லா பெயர்களையும் விட உயர்வாக்கினார்.
க0 அனைவரும் இயேசுவின் பெயருக்கு முன்பு தலைகுனிந்தே இருக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் இதனைச் செய்தார்.
பரலோகத்திலும், பூலோகத்திலும், பூமிக்குக் கீழுள்ள உலகத்திலும் உள்ளவர்கள் அவரைப் பணிவார்கள்.
கக “இயேசு கிறிஸ்துவே நமது கர்த்தர்” என்று அனைவரும் அறிக்கை செய்வர்.
அவர்கள் இதனைச் சொல்லும்போது பிதாவாகிய தேவனுக்கு மகிமை சேரும்.

### தேவன் விரும்புகிற மக்களாய் இருங்கள்

கஉ என்னுடைய அன்பு நண்பர்களே! எப்பொழுதும் நீங்கள்
கீழ்ப்படிந்து இருங்கள். உங்களோடு நான் இருந்தபோது நீங்கள்
தேவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தீர்கள். உங்களோடு நான் இல்லாதபோது
நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பது மிகவும்
முக்கியமான ஒன்றாகும். நான் தூரமாயிருக்கிறபோது நீங்கள்
தேவனிடம் மரியாதையும் அச்சமும் கொண்டு உங்கள் இரட்சிப்பு
நிறைவேற முயற்சி செய்யுங்கள். கங ஆமாம், தேவன் உங்களில்
பணியாற்றுகிறார். அவர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி
விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறார்.
அவற்றைச் செய்ய உங்களுக்கு தேவனே பலத்தைக் கொடுக்கிறார்.
கச முறுமுறுப்பு அல்லது வாக்குவாதம், இல்லாமல் எல்லாவற்றையும்
செய்யுங்கள். கரு அப்போதுதான் எதுவுமறியாதவர்களாகவும், எந்தத்
தவறும் இல்லாதவர்களாகவும் இருப்பீர்கள். நீங்கள் தேவனுடைய
குற்றமற்ற பிள்ளைகளாக இருப்பீர்கள். ஆனால் உங்களைச் சுற்றிலும்

# ச

க எஜமானர்களே! உங்கள் வேலைக்காரர்களுக்கு நீதியும் செம்மையுமானதைச் செய்யுங்கள். பரலோகத்தில் உங்களுக்கு ஒரு எஜமானர் இருக்கிறார் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

## கிறிஸ்தவர்களுக்குப் போதித்த கருத்துக்கள்

உ தொடர்ந்து பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் பிரார்த்தனை
செய்யும்போது, மனதைத் தயார் நிலையில் வைத்திருங்கள். மேலும்
தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். ங எங்களுக்காகவும் பிரார்த்தனை
செய்யுங்கள். தேவனுடைய செய்தியை நாங்கள் மக்களிடம் பரப்பிட வாய்ப்பு அளிக்குமாறு அவரை வேண்டுங்கள். கிறிஸ்துவைப் பற்றி தேவன் வெளிப்படுத்தியிருக்கிற இரகசிய உண்மையை நாங்கள் பிரச்சாரம் செய்ய பிரார்த்தனை செய்யுங்கள். இதனைப் பிரச்சாரம்
செய்ததால் நான் சிறையில் இருக்கிறேன். ச இந்த உண்மையை
நான் மக்களிடம் தெளிவுபடுத்த முடியும். இதுவே நான் செய்ய வேண்டியதாகும்.
ரு கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களோடு சேர்ந்து வாழும்போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதில் ஞானமுடையவர்களாக இருங்கள். உங்களால் முடிந்தவரை நல்வழியில் உங்கள் காலத்தைச்
செலவு செய்யுங்கள். சு நீங்கள் பேசும்போது கருணையுடனும்,
ஞானத்துடனும் இருங்கள். பிறகு, உங்களால் எவருக்கும் பதில் சொல்ல இயலும்.

## பவுலோடிருந்த மக்களைப் பற்றிய செய்தி

எ தீகிக்கு கிறிஸ்துவுக்குள் என் அன்பான சகோதரன். கர்த்தருக்குள் அவன் நம்பிக்கைக்கு உரிய ஊழியன். என்னோடு பணியாற்றும் கர்த்தரின் வேலையாள். என் வாழ்வில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற
எல்லாவற்றையும் அவன் உங்களுக்குக் கூறுவான். அ அதற்காகத்
தான் அவனையும் அனுப்புகிறேன். நாங்கள் எப்படி இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். உங்களை
உற்சாகப்படுத்த அவனை அனுப்புகிறேன். கூ ஒநேசிமுவோடு அவனை
அனுப்புகிறேன். ஒநேசிமுவும் கிறிஸ்துவுக்குள் எனது அன்பான நம்பிக்கைக்கு உரிய சகோதரன். அவன் உங்கள் கூட்டத்திலிருந்து வந்தவன். எங்களைப் பற்றிய செய்திகளை எல்லாம் தீகிக்குவும், ஒநேசிமுவும் உங்களிடம் கூறுவார்கள்.
கo அரிஸ்தர்க்கு தன் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிக்கிறான். அவன் என்னோடு சிறையில் இருக்கிறான். பர்னபாவின் உறவினனான மாற்கும் வாழ்த்து கூறுகிறான். நான் ஏற்கெனவே சொன்ன தகவல்களின்படி இவன் வந்தால்
வரவேற்றுக்கொள்ளுங்கள். கக இயேசுவும் வாழ்த்து கூறுகிறான்.
(யுஸ்து என்பது அவனது மறு பெயர்) யூதர்களாகிய இவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்காக என்னோடு பாடுபடுகிறார்கள். இவர்கள் எனக்கு ஆறுதலாக இருக்கிறார்கள்.
கஉ எப்பாப்பிராவும் வாழ்த்து கூறுகிறான். அவன் இயேசு கிறிஸ்துவின் ஊழியன். அவனும் உங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவன் எப்போதும் உங்களுக்காகவே பிரார்த்தனை

